உபநிஷதப் பலகணி

விவேக போதினி காரியாலயம்,
மயிலாப்பூர், சென்னை.

அணா 8

உபநிஷதப் பலகணி



1937

சக்ரவர்த்தி - ராஜகோபாலாச்சாரியார்

பொருளடக்கம்

			பக்கம்
	முன்னுரை	...	1
1.	சத்தியகாம ஜாபாலன்	...	5
2.	நசிகேதன்	...	7
3.	தேவர்கள் தோற்றது	...	10
4.	படித்தால் போதாது	...	12
5.	மைத்திரேயி	...	14
6.	இல்வாழ்க்கை : ஒரு பயிற்சி	...	16
7.	பரம்பொருளின் இலக்கணம்	...	19
8.	சிறு விதைக்குள் மரம் முழுதும்	...	21
9.	ஜலத்தில் கரைந்திருக்கும் உப்புப்போல்	....	24
10.	கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டவாறு	...	25
11.	குருகுலவாசம் முடிந்ததும்	...	26
12.	சில தருமநூல் தோற்றுவாய்கள்	...	33
13.	மரக்கட்டைக்குள் மறைந்துள்ள நெருப்பு	....	37
14.	சாப்பாட்டில் குற்றம் சொல்லவேண்டாம்	...	41
15.	உலர்ந்த கட்டையும் துளிர்த்துவிடும்	...	46
16.	தண்ணீர்க் குடத்தில் கண்ட 'ஆத்மா'	...	52
17.	வில்வளைத்த ஞானம்	...	60
18.	எங்கும் மறைந்துள்ள பொருள்	...	64
19.	க்ஷேத்திர நூலுக்கு அடங்காது	...	67
20.	கீதையும் உபநிஷதமும்	...	71
21.	நதிகளனைத்தும் கடலில் சேர்ந்துவிடும்	...	76
22.	அறிவுக்கு எட்டாத பொருள்	...	81
23.	முடிவுரை	...	87

सत्यमेव जयते नानृतं
सत्येन पन्था विततो देवयानः ।
येनाक्रमन्त्यृषयो ह्याप्तकामा
यत्र तत्सत्यस्य परमं निधानम् ॥

உபநிஷதப் பலகணி

முன்னுரை

ஹிந்து தருமத்திற்குப் பிரமாண நூல்களுள் முக்கியமானவை உபநிஷதங்கள். தற்காலப் பள்ளிக்கூடப் படிப்புப் பெற்றவர்கள் நம்முடைய தரும நூல்களைப் படிப்பதேயில்லை; படிக்க விரும்புவதுமில்லை. சிரத்தைக்கும் பக்திக்கும் பதில் அவைகளைக் கண்டால் பயம். வேதாந்தம், கீதை, உபநிஷத்து என்றால் பேயோ பிசாசோ வந்த மாதிரி விலகி நிற்கிறார்கள்.

நம்மில் புது வகை அறிவுகளைப் பெற்றவர்கள் நமக்குரிய பூர்வீக தரும நூல்களைப் படியாமலிருப்பது பலவிதத் தீமையை விளைவித்து வருகிறது. பிற தேசங்களில் இவ்வாறில்லை; அங்கே படித்த கூட்டம் தங்களுடைய சமூகத்தார் பின்பற்றும் மத நூல்களைப் புறக்கணிப்பது கிடையாது. அதனால்

அந்த நாட்டாரின் தரும முறை முற்போக்காளர் காப்பில் இருந்துவருகிறது. ஹிந்து தருமம் சீர்கெட்ட நிலையிலிருப்பதற்கு ஒரு பெரிய காரணம், நம் முடைய தேசத்தில், மத நூற் புலவருக்கும் மற்ற வகைக் கல்வி யடைந்தவர்களுக்கும் இடையில் ஏற் பட்டிருக்கும் பிரிவே. நம்முடைய முன்னோர்கள் எழுதிவைத்திருக்கும் அரிய தருமநூல்களைப் புது வகை அறிவு பெற்றவர்கள் படித்தறிந்து, வைதிகர் களைப்போல் தாங்களும் அவைகளை ஆராய்ந்து பொருளுரைக்கத் தகுதிபெற்றால், சமுதாயமும் மத மும்வேறு முயற்சியின்றியே தாமாகத் திருந்திவிடும். இதற்காகக் கலாசாலை மாணவர்கள் தங்களுடைய முக்கியமான கடமைகளுள் இதையும் சேர்த்துக் கொண்டு, நம்முடைய பழைய நூல்களை நன்றாய்க் கவனித்துப் படிக்கவேண்டும்; படித்து சமூக முன்னேற்றத்திற்காகத் தொண்டு செய்யவேண்டும்.

உபநிஷத்துகளில், சீடன் குருவினிடம் மிக நெருங்கி உட்கார்ந்து விஷயம் கேட்டுத் தெரிந்து கொள்ளுகிற முறையில் ஆத்மஞானம் போதிக்கப் படுகிறது. அக்காலத்து வாழ்வும் வழக்கங்களும், நாம் இந்நாளில் நடத்தும் வாழ்வுக்கு முற்றிலும் வேறானபடியால் பல இடங்களில் விஷயம் விளங்கா மலிருக்கும். தவிர, சீடனுக்கு விளக்கிச் சொல்லப் பட்ட விஷயங்களை வெறும் ஞாபகக் குறிப்புகளாகக் கொண்டே அந்நாளில் ரிஷிகள் உபநிஷத்துக்களை யாத்தனர். அச்சிட்டு வழங்கித் தனிமையில் படிப்ப

தற்காக எழுதிய புத்தகங்களல்ல அவை. இக் காரணத்தினுலும் சில இடங்களில் பொருள் விளங்குவது கடினமாயிருக்கும். ஆயினும் வாழ்வை நல்வழியில் நடத்தி, மனதைச் சுத்தமாக வைத்துக்கொண்டு, மெய்ப் பொருளில் உண்மைப் பற்றுடன் படிப்பவர்களுக்கு இந்த உபநிஷத்துகளைப்போல் உதவக்கூடிய நூல்கள் உலகத்தில் வேறில்லை.

நம்முடைய நாட்டில் அரசுபுரிந்த மொகலாய சக்கரவர்த்திகளுள் ஒருவரான ஷாஜஹானுடைய மூத்த குமாரனும், அவுரங்கஸீப் சக்கரவர்த்தியின் அண்ணனுமான தாரா ஷுகோ என்ற புகழ் பெற்ற மேதாவி, கி. பி. 1657-ம் ஆண்டில், பல பண்டிதர்கள் உதவியைக்கொண்டு ஐம்பது முக்கியமான உபநிஷத்துகளைப் பார்ஸி பாஷையில் மொழிபெயர்த்தான். இந்தப் பார்ஸி மொழிபெயர்ப்பை வைத்தே ஐரோப்பிய புலவர்கள் கி. பி. 1801-ல் லத்தீனில் முதன் முதலில் உபநிஷத்துகளை மொழிபெயர்த்தார்கள். உடனே மேல்நாட்டில் உபநிஷத்துகளின் பெருமை பரவிற்று. மொகலாய ராஜகுமாரன் தாராவின் உயர்ந்த அறிவும், சமஸ்கிருத புலமையும், மேலான குணமுமே, உபநிஷத்துகளின் பெருமை உலகம் முழுவதும் பரவுவதற்குக் காரணமாயிருந்ததை நாம் என்றும் மறக்கக்கூடாது.

உபநிஷத்துகளில் என்ன விஷயம் எவ்வாறு சொல்லப்படுகிறதென்பது கூட அறியாமல் கல்விப்

பேறுபெற்ற ஹிந்துக்கள் இருந்துவருவது பெரிய அவமானம். நம்மைப் பெற்ற முன்னோர்களில் மகா ஞானிகளும் குணசீலர்களுமான முனிவர்கள் கண்ட கருத்துக்களை இக்காலத்துச் சிறுவர்களுக்கு அறிமுகப்படுத்த எழுதிய இந்தப் புத்தகத்தைப் பெரியோர்கள், குற்றங்களைப் பொறுத்து, ஆசீர்வதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

1

சத்தியகாம ஜாபாலன்

சத்தியகாமன் என்ற வாலிபன் ஒருநாள் தன் தாயார் ஜபாலேயைப் பார்த்து, "அம்மா, நான் ஒரு குருவிடம் பிரமசாரியாக அமர்ந்து வேதம் ஓத விரும்புகிறேன். என்னுடைய கோத்திரம் என்ன? சொல்லுவாய்" என்று கேட்டான்.

அதற்கு அவள் " குழந்தாய், உன் கோத்திரம் எதுவென்று எனக்குத் தெரியாது. சிறு வயதில் நான் பரிசாரக வேலேயில் அதிகம் சுற்றித்திரிந்தேன். அந்நாளில் உன்னைப் பெற்றேன். ஆகையால் உன் கோத்திரம் எது என்று அறியேன். என் பெயர் ஜபாலே; உன் பெயர் சத்தியகாமன். ஆகையால் **சத்தியகாம ஜாபாலன்** என்று உன் பெயரைச் சொல்லு" என்ருள். வாலிபன் ஹாரித்திருமர் என்ற பெரியோரிடம் போய், "ஐயனே, நான் பிரமசாரியாக அமர விரும்புகிறேன். என்னை எடுத்துக்கொண்டருள வேண்டும்" என்ருன்.

அதற்கு அவர் "அப்பனே, உன் கோத்திரம் என்ன?" என்று கேட்டார்.

“ஐயனே, என் கோத்திரம் எனக்குத் தெரியாது. என் தாயாரைக் கேட்டேன். அவள் ‘நான் யுவதியாக இருந்த நாளில் வேலைக்காரியாகத் திரிந்தேன். உன் கோத்திரம் என்னல் சொல்ல முடியாது. என் பெயர் ஜபாலை; உன் பெயர் சத்தியகாமன்’ என்ருள். ஆகையால் ஐயனே, நான் சத்தியகாம ஜாபாலன். என்னைச் சீடனுக எடுத்துக் கொள்வீர்களா?” என்ருன்.

இதைக் கேட்ட குரு, மிகவும் மகிழ்ந்து, “பிள்ளாய், நீ தைரியமாக உண்மை பேசினுய். நல்ல குலத்துக்கு அதுவே சாட்சியம். போ, சமித்து கொண்டு வா. உன்னைச் சீடனுக எடுத்துக்கொள்கிறேன்” என்ருர்.

முறை தவறிப் பிறந்தவனுக்கும் அவனுடைய உயர் குணத்தைக்கண்டு வேதம் ஓதுவித்தார்.

———

2

நசிகேதன்

வாஜசிரவஸர் தமக்குள்ள உடைமைகள் அனைத்தையும் தானமாகக் கொடுத்து ஒரு பெரிய யாகத்தைச் செய்தார். அவருக்கு நசிகேதன் என்ற ஒரு மகன் இருந்தான்.

தகப்பனுர் செய்த யாகத்தில் தட்சிணைகள் வழங்கியதைப் பார்த்த சிறுவன் யோசிக்கலானுன். "இத்தகைய தட்சிணைகளினுல் என்ன பலன் உண்டாகும்? பிரியமான பொருள்களைக் கொடுப்பதாயிருந்தால், தனக்கு மிகவும் பிரியமான என்னையல்லவோ கொடுக்கவேண்டும்? உதவாத பசுக்களைக் கொடுப்பதில் என்ன இருக்கிறது?'' என்று தனக்குள் சொல்லிக்கொண்டு தகப்பனுரிடம் போய், "அப்பா, என்னை யாருக்குத் தட்சிணையாகக் கொடுக்கப்போகிருய்?'' என்று கேட்டான்.

பையன் பேச்சைத் தகப்பனுர் முதலில் காதில் போட்டுக்கொள்ளாமலிருந்தார். பிறகு அடுத்தடுத்து அவ்வாறே கேட்டான். தகப்பனுர், வேடிக்கையாகவோ கோபமாகவோ, "உன்னை யமனுக்குத் தட்சிணையாகக் கொடுக்கப் போகிறேன்'' என்ருர்.

சொன்னதும், அவர் "என்ன செய்து விட்டேன்! இந்த யாகத்தில் சொன்ன சொல்லை நடத்தியே தீரவேண்டுமே" என்று திகைத்தார்.

தகப்பனர் மனக்குழப்பத்தைக் கண்டு நசிகேதன், "ஐயனே, யமனிடம் நான் தனியாகவா போகிறேன்? எனக்கு முன் எண்ணிறந்த பேர் அவனிடம் சேர்ந்திருக்கிறார்கள். எனக்குப் பின்னும் வெகு பேர்கள் போகப்போகிறார்கள். என்னை யமன் என்ன செய்துவிடப் போகிறான்? நமக்கு முன்வாழ்ந்தவர்கள் எங்கே? நமக்குப்பின் வருபவர்களின் கதிதான் என்ன? நெற்பயிர்போல், மனிதர்கள் வளர்ந்து முதிர்ந்து அறுபடுகிறார்கள், மறுபடி முளைக்கிறார்கள். இவ்வளவே யல்லவா?" என்று சொல்லி, யமாலயம் போய்ச் சேர்ந்தான்.

யமன் வீட்டில் பையன் வருவது தெரியாதாகையால், யாரும் எதிர்கொள்ளவில்லை. மூன்று நாள் காத்திருந்தான். பிறகு யமன் வந்து பையனை நமஸ்கரித்து, "அதிதியாய் வந்த நீ சரியாகப் பூசிக்கப்படாமல் என் வீட்டில் மூன்றுநாள் காத்திருந்தாயாதலால், நான் அபராதம் செய்தவனானேன். அதற்குப் பரிகாரமாக மூன்று வரங்கள் கேட்டு என்னிடம் பெறுவாயாக" என்றான்.

நசிகேதன் வணங்கிச் சொன்னதாவது:— "யமனே, என் தகப்பனர் மனம் சாந்தி அடைந்து என்மேல் அவர் கொண்ட கோபம் தீரவேண்டும். இது நான் கேட்கும் முதல் வரம்."

“அவ்வாறே யாகுக” என்ருன் யமன்.

அதன் பின், இரண்டாவதும் மூன்ருவதுமாக நசிகேதன் கேட்ட வரம் பரம்பொருள் உபதேசம்.

யமன் பல ஆசைகள் காட்டியும் நசிகேதன் அவைகளை மறுத்துவிட்டான். “யமனே, நீ இருக்கும் வரையில் மனிதர்களின் ஆயுள் எம்மாத்திரம்? நீ தருவதாகச் சொல்லும் செல்வங்கள் என்ன சுகம் தரும்? ஐசுவரியங்களும், குதிரைகளும், ஆட்டமும், பாட்டும் நீயே வைத்துக்கொள். சந்தேகங்கள் தீர்ந்து உண்மை உபதேசம் உன்னைப் போன்ற ஒரு குருவிடம் பெறுவதையே நான் விரும்புகிறேன்” என்ருன்.

“உன்னைப் போன்ற தீரன் ஒருவன் சீடனுகக் கிடைப்பதும் அரிது” என்று யமனும் சம்மதித்து உபதேசம் செய்யப் புகுந்தான்.

3

தேவர்கள் தோற்றது

ஒரு சமயம் தேவர்கள் வெற்றி அடைந்தார்கள். வெற்றியானது ஈசுவர லீலை என்று அறியாமல், தங்களுடையதாகவே எண்ணிப் பெருமை பாராட்டிக் கொண்டார்கள். அப்போது பிரம்மம் அவர்கள் முன் நின்றது. "இது என்ன தோற்றம்?" என்று அவர்கள் திகைத்து "அக்கினியே! போய் யார் என்று அறிந்து வா" என்று அக்கினி பகவானை அனுப்பினார்கள்.

அக்கினிபகவான் அதனண்டை பாய்ந்தான். அந்தத் தோற்றம் அசையாமல், அக்கினியைப் பார்த்து, "யார் நீ?" என்றது.

"நான் அக்கினி — ஜாத வேதஸம்" என்றான் அக்கினி பகவான்.

"உனக்கு என்ன வீரியம் உண்டு?" என்றது தோற்றம்.

"உலகத்தில் எதையும் எரித்துப் போடுவேன்" என்று அக்கினி பெருமையாகச் சொல்லிக்கொண்டான்.

"அப்படியா?" என்று சொல்லி, அது ஓர் உலர்ந்த புல் துரும்பை அக்கினி முன் வைத்து, "இதை எரி!" என்றது. அக்கினி அதன்மேல் தன் வலியெல்லாம் கொண்டு பாய்ந்தும் அதை எரிக்க முடியவில்லை. வெட்கப்பட்டுத் திரும்பிப்போய், "யாரோ, எனக்கு விளங்கவில்லை" என்று தேவர்களிடம் சொன்னான்.

அவ்வாறே வாயுவும் இந்திரனும் அவமானப் பட்டார்கள். 'எதையும் தகர்த்து விடுவேன்' என்று வீரியம் பேசிய வாயுவால், எவ்வளவு வேகமாக வீசிப்பார்த்தும் தன்முன் வைக்கப்பட்ட அந்தத் துரும்பை நகர்த்த முடியவில்லை. எதையும் அறிவேன் என்று எண்ணிய இந்திரன் கிட்ட நெருங்கினதும் உருவம் அவன் கண்களுக்கு மறைந்தே போயிற்று.

பிறகு ஹைமவதி இந்திரனுக்குப் பிரசன்னமாகி அத்தோற்றம் பரம்பொருள் என்பதை விளக்கித் தேவர்களின் சக்தியனைத்தும் பிரமத்தின் சக்தியே என்று உபதேசம் செய்தாள்.

4

படித்தால் போதாது

நாரத முனிவர் ஒருநாள் சநத்குமாரரிடம் சென்று, "ஐயனே, உபதேசம் கோருகிறேன்" என்று வணங்கி நின்றார்.

"உமக்குத் தெரிந்ததைச் சொல்லும்; அதற்கு மேல் நான் சொல்லுகிறேன்" என்று சநத்குமாரர் பதிலுரைத்தார்.

நாரதர், "எனக்கு ரிக் வேதம் தெரியும், யஜுர் வேதம் தெரியும், சாம வேதம் தெரியும். அதர்வண வேதமும் தெரியும். அதற்குமேல், இதிகாசங்கள் புராணங்கள் அனைத்தும் அறிவேன். கர்மங்கள், மந்திரங்கள் அனைத்தும் அறிவேன். கணிதம், சோதிடம், கால அளவு சாஸ்திரம், வாகோ வாக்கியம், ஏகாயனம், வியாகரணம், காவியம், யாப்பியல், அலங்காரம், பூத நூல்கள், ஆயுத நூல், வான சாஸ்திரம், விஷங்களைப்பற்றிய சாஸ்திரம், நாட்டியம், சங்கீதம், இன்னும் எல்லாக் கலைகளும் படித்திருக்கிறேன். இவை யெல்லாம் நான் அறிவேனாயினும், ஆத்மாவைப் பற்றி நான் அறியவில்லை. ஆத்ம ஞானம் அடைந்தால்தான் துக்கம் தீரும் என்று தங்களைப் போன்றவர்கள் சொல்லக்

கேட்டிருக்கிறேன். இன்னும் துக்கம் எனக்குத் தீர வில்லை. எனக்கு ஞானம் அருள்வீராக'' என்றார்.

சநத்குமாரர், "நீர் படித்தவை யனைத்தும் வெறும் பெயர்களைப் பற்றித்தான். பெயரைவிட மேலானது ஒன்றுண்டு; அதுவே மெய்ப்பொருள்'' என்று உபதேசத்தை ஆரம்பித்தார்.

* * * *

சுவேதகேதுவைப் பார்த்து, அவன் தகப்பனார் உத்தாலகர், "சுவேதகேது! நீ பிரமசாரியாக அமர்ந்து படிக்கவேண்டும். நம்முடைய குலத்தில் யாரும் வெறும் பிறவிப் பிராமணர்களாக இருந்தது கிடையாது, கல்வி கற்கவேண்டும். ஓர் ஆசாரிய னிடம் சேவைசெய்து படித்து வா'' என்றார்.

அதற்கிணங்கி, பையன் பன்னிரண்டாவது வயது தொடங்கி இருபத்து நான்கு வயது வரையில் ஒரு குருவிடமிருந்து வேதங்களும் அக்காலத்தில் கற்கக்கூடிய மற்றவையும் படித்துவிட்டு மிகவும் கர்வங்கொண்டு எல்லாம் தெரிந்துவிட்டது என் றெண்ணி வீட்டுக்குத் திரும்பிவந்தான்.

"மகனே, எல்லாம் படித்தறிந்து விட்டதாக எண்ணுகிறாய் போலிருக்கிறது. அறிவுக்கு எட் டாத பொருளை எவ்வாறு உணர்வது என்பதைக் கேட்டுத் தெரிந்து கொண்டாயா?'' என்று தகப்ப னார் கேட்டார். "அதை நான் கேட்கவில்லை. அது என்ன?'' என்றான் மகன்.

பிறகு தகப்பனார் உபதேசிக்கிறார்.

5

மைத்திரேயி

யாக்ஞவல்கியர் இல்லறம் முடித்து விட்டு வனம் செல்ல ஏற்பாடுகள் செய்த சமயம், தம் மனைவிகள் இருவரில், பரம்பொருள் விஷயத்தில் அறிவு பெற்றிருந்த மைத்திரேயியைக் கூப்பிட்டு, "மைத்திரேயி, நான் வனம் போக விரும்பியது உனக்குத் தெரியுமே, உனக்கும் காத்யாயனிக்கும் தகுந்த ஏற்பாடு செய்துவிடுதல் நலமல்லவா?" என்றார். அதைக்கேட்ட மைத்திரேயி, "பகவானே, இந்தப் புவி முழுதும் சகல சம்பத்துகளும் நிறைத்து நீர் எனக்குத் தந்தால், அதைக் கொண்டு நான் இறவாமை அடைவேனோ?" என்றாள்.

யாக்ஞவல்கியர், "எவ்வாறு அது முடியும்? செல்வத்தினால் என்ன சுகங்கள் அடையலாமோ, அவற்றையெல்லாம் நீயும் அடையலாம், அமிருதத்துவம் எதிர்பார்த்தல் கூடாது" என்றார்.

"ஐயனே, முக்தி தராத செல்வத்தை வைத்துக் கொண்டு நான் என்ன செய்வேன்? தாங்கள் வனம்

போகுமுன் எனக்கு அறிவு உபதேசித்தருள்வீர்களாக; அதைத்தான் விரும்புகிறேன்'' என்றாள்.

யாக்ஞவல்கியர் மனம் பூரித்து, "பிரியே, என் அன்பைப் பெருக்கினாய். வா, உட்காரு, நான் சொல்லுவதைக் கவனமாய்க் கேள். கணவனைக் காதலிக்கிறாள் மனைவி. அந்த அன்பின் பயன் என்னவென்று எண்ணுகிறாய்? கணவனை விரும்புவதன்று. அவனுள் நிற்கும் மெய்ப்பொருளை விரும்பப் பயிலுவதே'' என்று தொடங்கி உபதேசிக்கலானார்.

6

இல் வாழ்க்கை : ஒரு பயிற்சி

நல்ல முறையில் இல்லறம் நடத்தி உள்ளம் பக்குவம் அடைந்த பின்னரே துறவு நிலையானது உண்மைப் பயன் தரும் என்பது நம்முடைய தரும நூல்களின் முடிவு. இல்லற வாழ்வினால் மனம் எவ்வாறு பக்குவம் அடையும்? ஒருவன் தன் மனைவியிடம் அன்பு செலுத்தித் தன்னைத் தான் ஓரளவு மறக்கவும் துறக்கவும் கற்றுக்கொள்ளுகிறான். அவ்வாறே குடும்பத்தின் நன்மை, குலத்தின் நன்மை, விருந்தினரின் திருப்தி, முதலியவைகளும் 'தான்' என்னும் வலையினின்று வரவர வெளியேற மனிதனுக்குப் பயிற்சி தந்து வழிகாட்டுகின்றன. இல்லற வாழ்வுக்குரிய அன்புகள் அனைத்தும் பேரன்புக்கு ஒரு பயிற்சியே யாகும். இந்தப் பயிற்சியைச் சரிவரப் பெற்ற பின்னரே உள்ளத்தில் ஞான ஒளிக்கு வாய்ப்பு ஏற்படும்.

மக்கள், மனைவி, கணவன், குலத்தார், ஊரார், தேசத்தார் என்றெல்லாம் கருதிக் கவலைப்பட்டு அன்பும், பணியும் செய்தால் அப்பொருள்களில்

மறைந்து உள்ளூடி நிற்கும் மெய்ப்பொருளைக் காணும் அறிவு உண்டாகும். ஆனால் இதற்கு இல்லற வாழ்வை ஓர் அறமாக எண்ணி, அற வழியில் நடத்தி, வரவரப் பற்றுக்களைக் கழற்றும் பயிற்சியில் ஈடுபடவேண்டும்.

யாக்ஞவல்கியர் இல்லற வாழ்வு முடித்துவிட்டு வனம் செல்ல ஏற்பாடுகள் செய்து மனைவி மைத்திரேயியைப் பார்த்து உபதேசித்தது இந்த உண்மையையே. அதன் சுருக்கம் பின்வருமாறு:—

கணவனைக் காதலிப்பது கணவனைக் காதலிக்க அல்ல, பரமாத்மாவைக் காதலிக்கப் பயில்வதற்காகவே. கணவன் மனைவியைக் காதலிப்பதும் இதற்காகவே. இதுவே காதலின் பயனும் உண்மைப்பொருளும் ஆகும். பெற்றமக்களிடம் உள்ளம் கரைவதும் இதற்காகவே. செல்வத்தை விரும்புவதும் இதற்காகவே. மனைவி, கணவன், மக்கள், செல்வம், பசுக்கள், இவைகளினுள் நிற்கும் பரம்பொருளைக்கண்டு அதனுடன் கலந்து ஒன்றுவதற்கு உள்ளம் பொங்க வேண்டும். இந்தப் பயிற்சி பெறுவதே அவைகளைக் காதலித்து அனுபவித்து வாழ்வதன் உண்மைப் பயன்.

ஒருவனுக்குத் தன் குலத்தின்மேல் பிரியம். குலமும் ஜாதியுங் கூடப் பாரமாத்மிக பக்திக்குப் பயிற்சியே யாகும். எங்கும் பரவி நிற்கும் மெய்ப்பொருளைக் கண்டு காதலிக்கவே வேதம் ஓதுதல்,

கலைகள்: கற்றல், பூததயை முதலியன அமைந் திருப்பதாகக் கருதுவாய்.

பரம்பொருளை மறந்து, வேறெந்தப் பொருளைத் தேடி வாழ்ந்தாலும், அது ஏமாற்றத்தையே தரும்.

பரம்பொருளைத் தனியாகக் காணவோ, அடையவோ மனித வாழ்வில் முடியாது. மற்றப் பொருள்களில் அது உள்ளூடி நிற்பதை அறிந்து அப்பொருள்களின் வழியாகவே அதை அடைய முடியும். ஒரு பேரிகையிலும், சங்கிலும் ஒலி உண்டாகிறது. ஒலியை மட்டும் எடுத்துப் பிடித்துக் கொள்ள முடியாது. சங்கையும், பேரிகையையும், அவற்றை ஒலிப்பவனையும் அடைந்து, ஒலியைப் பெறலாம். வீணையின் நாதத்தை எடுத்து வைத்துக் கொள்ள முடியாது. வீணையைப் பெற்று நாதத்தையும் கேட்கலாம். இவ்வாறே பரம்பொருளையும் காணலாம்.

7

பரம்பொருளின் இலக்கணம்

[இதுவும் மைத்திரேயிக்கு யாக்ஞவல்கியர் உபதேசித்தது :]

ஈர விறகுக் கட்டைகள் போட்டுத் தீ எரியவைத்தால் புகை கிளம்புகிறது. அவ்வாறே வேதங்களும், புராணங்களும், கலைகளும், உபநிஷத்துகளும், யாகங்களும், தானங்களும், எல்லாம் தீயின் புகைபோல் பரம்பொருளினின்று வெளி வந்தன வென்று அறிவாய். சரியாக எரியவிட்டால் பின்னர் தீயைக் காண்பாய்.

ஓர் உப்புக் கட்டிக்கு, உள் என்றும், புறம் என்றும் உருவ வேறுபாடு இல்லை. நீரில் கலந்தால் மறைந்து, அவ்வளவும் உவர்ப்பு என்ற புலனுணர்ச்சியாகவே தீர்ந்து போய்விடுகிறது. அவ்வாறே ஆத்மா முக்தி யடைந்தபின் பஞ்ச பூதங்களைவிட்டுப் பரம்பொருளுடன் கலந்து ஒன்றாகி விடுகிறது. பிறகு அதற்குத் தன்னறிவு கிடையாது. தான் என்ற அறிவு போய்விடும் என்று முனிவர் சொன்னதும் மைத்திரேயி தயங்கினாள்.

அதைக் கண்டு யாக்ஞவல்கியர், 'ஏன் தயங்குகிறாய்' என்று மேலும் உபதேசிக்கிறார்:—

இரண்டு பொருள்களிருந்தால், ஒன்று மற்றொன்றைப் பார்ப்பது, மோப்பது, அருந்துவது வணங்குவது, கேட்பது, அறிவது, இவை முடியும். அனைத்தும் ஒரு பொருளான பிறகு, ஒன்று மற்றொன்றைத் தீண்டுவதும் பார்ப்பதும் அறிவதும் ஏது?

அறிவு என்பதே அவன். அதற்குமேல் அவனை அறிவது எவ்வாறாகும்? 'இது அன்று,' 'இது அன்று' என்றே பரம்பொருளுக்கு இலக்கணம் கூற முடியும். வேறு இலக்கணங் கூற முடியாது. அறிபவனும் அறிபடு பொருளும் ஒன்றேயான பிறகு, 'அறிவு' என்பது ஏது?

"மைத்ரேயி, இதுவே உனக்கு உபதேசம். பரம்பொருளைப் பற்றி இம்மட்டும் தான் விளக்க முடியும்" என்று சொல்லி யாக்ஞவல்கியர் வனம் சென்றார்.

8

சிறு விதைக்குள் மரம் முழுதும்

சாங்தோக்கிய உபநிஷத்தில் உத்தாலகர் தம்முடைய குமாரன் சுவேதகேதுவுக்கு உபதேசித்தது சொல்லப்படுகிறது.

"அனைத்தும் ஒரு சக்தியிலிருந்து வந்ததாகச் சொல்லுகிறீர்களே. இந்த அற்புத உலகம் அவ்வளவும், இந்தப் பல்லாயிர உருவ வேற்றுமைகளெல்லாம், பெயரும் வடிவமுமற்ற ஒரு பொருளிலிருந்து எவ்வாறு உண்டாகும்?" என்று மகன் கேட்கிறான்.

"அப்பனே! அந்த ஆலமரத்தின் பழம் ஒன்று எடுத்துவா" என்றார்.

சுவேதகேது ஒரு பழத்தை எடுத்துவந்து "இந்தாரும், ஐயா!" என்று சொன்னான்.

"அதை உடை" என்றார்.

"உடைத்தேன், ஐயா" என்றான்.

"உள்ளே என்ன இருக்கிறது பார்?" என்றார்.

"சிறு சிறு விதைகள் இருக்கின்றன" என்றான்.

"ஒரு விதை எடுத்து, அதை உடைத்துப் பார்" என்றார்.

ஒரு சிறு விதையை எடுத்து, சொன்னபடிச் செய்தான்.

"என்ன காண்கிறாய்?" என்றார்.

"ஒன்றும் காணவில்லை" என்றான்.

"அப்பனே, அந்த ஒரு விதைக்குள் உன் கண்ணுக்குத் தோற்றமாகாமல் கிடக்கும் சூட்சும வஸ்துவே, கிளைகளும் இலைகளும் விழுதுங்கொண்ட இந்தப் பெரிய ஆலமரம் ஆயிற்று. இந்த மரம் முழுதும் அந்தச் சிறுவிதையினுள் கண்ணுக்குத் தெரியாமல் அடங்கியிருந்தது. இதை யோசித்துப் பார். இவ்வாறே உலகம் முழுதும் கண்ணுக்குப் புலப்படாத சக்தியிலிருந்து உண்டாயிற்று" என்றார்.

பல்லாயிர வருஷங்களுக்கு முன் உத்தாலகர் தம் மகனுக்கு விளக்கிச் சொன்னதை ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் நாம் இப்போதும் உண்மையறிவும் அடக்கமும் அடையலாம். ஆலம்விதை மிகச் சிறியது. அதற்குள் எவ்வாறு இந்தப் பெரிய மரமும் அதன் கிளைகளும், விழுதும், இலையும், பாலும், காயும் அவைகளின் நிறம், சுவை, குணம், எல்லாம் அடங்கி மூடிக்கிடந்தன? அந்த விதையை எங்கே புதைத்தாலும் இந்த நிறம், இந்தக் குணம், இந்த அளவு, இந்த உருவம் கொண்ட மரமே உண்டாகும். வேறொன்றினின்று இது உண்டாகாது. இதினின்று வேறொன்று உண்டாகாது. மரம் முழுதும்

அவ்விதையினுள் அருவமாகக் கிடக்கிறது. இதைப் போலவே ஒவ்வொரு வகை விதையிலும் அவ்வவ் வகை மரம் முழுதும், பூவின் வாசனையும் நிறமும், மற்ற சகல விசேஷ குணங்களும் உள்பட, மறுபடி, அம்மரத்தில், இத்தகைய விதைகள் நிறைந்த கனி கள் உண்டாக்கும் சக்தி உள்பட, அடங்கி நிற்கின் றன. இந்த அதிசயத்தை ஆழ்ந்து சிந்தித்தால், உலகத்தின் இரகசியம் ஒருவாறு விளங்கும். கற்றறி மூடரும் அடக்கம் பெறலாம்.

9

ஜலத்தில் கரைந்திருக்கும் உப்புபோல்

[இதுவும் உத்தாலகர் தன் மகன் சுவேத கேதுவுக்கு உபதேசித்தது:]

"உலகம் முழுவதும் பரவியிருக்கும் இந்தப் பொருள் எவ்வாறு மறைந்து போயிற்று?" என்று மகன் கேட்கிறான். அதற்கு உத்தாலகர் உபதேசித்ததாகச் சொல்லியிருப்பது தற்கால இரசாயன நூல் சோதனை முறையாகவே யிருக்கிறது. மகனை ஓர் உப்புக்கட்டி கொண்டுவரச்சொல்லி, அதைத் தண்ணீரில் போடச்சொன்னார். பிறகு, "நாளைக் காலையில் வா" என்றார்.

மறுநாள் தகப்பனரிடம் பையன் வந்து நின்றான். "நேற்றுத் தண்ணீரில் போட்ட உப்பைக் கொண்டுவா" என்றார். பையன் பார்த்தான், உப்பு எங்ஙனம் இருக்கும்? கரைந்து போயிருந்தது.

"ஐயா, உப்பு அழிந்துபோயிற்று" என்றான்.

"தண்ணீரில் மேலே கொஞ்சம் எடுத்து அருந்து" என்றார்.

"உப்பா யிருக்கிறது" என்றான் மகன்.

"மத்தியில் அருந்திப் பார்" என்றார்.

"அதுவும் உப்பாகத்தான் இருக்கிறது" என்றான்.

"அடித்தண்ணீரைப் பார்" என்றார்.

அதை யருந்திப்பார்த்து, அதுவும் அப்படியே இருப்பதாகச் சொன்னான்.

"கொட்டிவிட்டு வா" என்றார்.

மகன் கொட்டிவிட்டு வந்தபின், "உப்பு அழிந்துவிட்டதா?" என்று கேட்டார்.

"இல்லை, எவ்வுருவாகவோ எங்கேயோ அது இருந்துகொண்டுதான் இருக்கிறது" என்றான்.

"அப்பனே, இவ்வாறே உலகம் முழுதும் பரம் பொருள் இருக்கிறது. கண்ணுக்குப் புலப்படாமல், அனைத்திலும் இருக்கிறது. அதுவே சத்து, அதுவே ஆன்மா. நீயும் அதுவே. தத்வமஸி" என்றார்.

10

கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டவாறு

[ஞான ஒளி பெறும் வழியை உத்தாலகர் மகனுக்கு உபதேசிக்கிறார்:]

"ஒருவனைக் கண்ணைக் கட்டிக் காட்டில் திருடர் கொண்டுபோய் விடுவதுபோல் முன் செய்த கருமங்கள் நமது ஞானத்தை மறைத்து ஆசைகளாகிய மோகக் கட்டுகளால் கண்ணைக் கட்டி, உலகம் என்ற காட்டில் நம்மைக் கொண்டுவந்து விட்டிருக்கின்றன. நாம் இருக்கும் இடம் எது, நம்முடைய ஊருக்கு எது வழி என்பதறியாமல் பயத்திலும் மயக்கத்திலும் கிடக்கிறோம். தகுந்த ஆசிரியன் கிடைத்துக் கட்டை அவிழ்த்தால் கண்கள் திறந்து வழிதேடி ஊர்போய்ச் சேரலாம். ஆசைக்கட்டுக்கள் அவிழ்ந்தால் கண்கள் திறந்து ஞானப்பிரகாசம் வரும். நம்முடைய உண்மைச் சொரூபம் நமக்குத் தெரியவரும். இல்லாவிடில் எந்த முயற்சியும் பயன் தராது!"

சரியான காட்சி பெறக் கண்ணும் யுக்தியும் போதாது. ஆசைத் திரைகள் மனதை மூடாமல் நீங்கவேண்டும். ஆசைகளும் பற்றுக்களும் அறிவைக் கெடுக்கின்றன. அவை நீங்கினால் தான் அறிவு தன் சுபாவ ஒளியைப் பெறும்.

11

குருகுல வாசம் முடிந்ததும்

ஒவ்வொரு வருஷமும் பி. ஏ., முதலிய கல்விப் பட்டம் பெற்ற மாணவர்களுக்கு ஒரு நீண்ட பிரசங்கம் சர்வகலாசாலை மண்டபத்தில் நடைபெறும் வழக்கம் அனைவரும் அறிவார்கள். பழைய காலத்திலுங்கூடக் குருகுலவாசம் முடிந்ததும் ஆசாரியன் சீடனை வீட்டுக்கு அனுப்புமுன், வாழ்க்கைக் கிரமத்தைப் பற்றி ஒரு கடைசி உபதேசம் செய்வது வழக்கம் என்று தைத்திரீய உபநிஷத்திலிருந்து தெரிய வருகிறது. அதில் ஓரிடத்தில், இத்தகைய பிரசங்கம் ஒன்றைக் காண்கிறோம். அதிலிருந்து அக்காலத்திய கல்வி முறையைக் கற்பனைக் கண்ணால் ஒருவாறு பார்க்கலாம்.

குருகுலத்தில் வசித்துவந்த சீடனுக்கு வேதம் ஓதுவித்து முடிந்ததும் குரு உபதேசிக்கிறார்.

ஸத்யம் வத । தர்மம் சர ||

ஸ்வாத்யாயான் மா ப்ரமத: ||

ஆசார்யாய ப்ரியம் தனம் ஆஹ்ருத்ய ப்ரஜா தந்தும்
மா வ்யவச்சேத்ஸீ : ||

ஸத்யான் ந ப்ரமதிதவ்யம் ||
தர்மான் ந ப்ரமதிதவ்யம் ||
குசலான் ந ப்ரமதிதவ்யம் ||
பூத்யை ந ப்ரமதிதவ்யம் ||
ஸ்வாத்யாய ப்ரவசநாப்யாம் ந ப்ரமதிதவ்யம் ||
தேவ பித்ரு கார்யாப்யாம் ந ப்ரமதிதவ்யம் ||
மாத்ரு தேவோ பவ
பித்ரு தேவோ பவ
ஆசார்ய தேவோ பவ
அதிதி தேவோ பவ ||

"உண்மையைப் பேசு!

அறத்தைச் செய்!

குருவுக்கு நன்கொடை கொணர்ந்து கொடுத்த பின் சந்ததி என்ற நூல் அறுபட்டுப் போகாமல் காப்பாயாக!

உண்மையினின்று வழுவாதே!

அறத்தினின்று வழுவாதே!

நலனைப் புறக்கணிக்க வேண்டாம்.

செல்வத்தைப் புறக்கணிக்க வேண்டாம்.

ஓதுதலும் ஓதுவித்தலும் மறக்கவேண்டாம்.

தேவர்களுக்கும் முன்னோர்களுக்கும் செய்ய வேண்டியதை மறக்கவேண்டாம்.

தாயைத் தெய்வமாகக் கருது.
தகப்பனைத் தெய்வமாகக் கருது.
ஆசார்யனைத் தெய்வமாகக் கருது.
வந்த விருந்தினரைத் தெய்வமாகக் கருது.

"எந்தச் செயல்கள் குற்றமற்றனவோ அவையே நீ செய்யத் தக்கவை. மற்றவற்றைச் செய்யக் கூடாது. எங்களிடம் நீ கண்ட நன்னடத்தையைப் பின்பற்றுவாயாக; அல்லாதது ஒரு நாளும் வேண்டாம். எங்களைவிட மேம்பட்ட அந்தணர்கள் இருக்கிறார்கள். அவர்களை ஆஸனத்தில் அமர்த்தி கவுரவிப்பாயாக.

"கொடுப்பதைச் சிரத்தையுடன் கொடுக்க வேண்டும். அசிரத்தையாகக் கொடாதே; தாராளமாகக் கொடுக்கவேண்டும்; அடக்கத்துடன் கொடுக்க வேண்டும்; பயத்துடன் கொடுக்கவேண்டும்; அன்புடன் கொடுக்கவேண்டும்.

"செய்யும் கருமங்களிலேனும் நடக்கும் முறையிலேனும் உனக்கு ஏதாவது சந்தேகம் ஏற்பட்ட போது, விவேகமும், தருமத்தில் பற்றும், இரக்கமும் கொண்ட அந்தணர்கள் அவ்விஷயங்களில் எவ்வாறு நடந்து கொள்ளுகிறார்களோ அவ்வாறு நீயும் செய்வாயாக. விலக்கப்பட்ட விஷயங்களிலும் அவ்வாறே பெரியோர்களைப் பின்பற்றுவாயாக.

"இதுவே முறை, இதுவே உபதேசம், இதுவே வேதத்தின் பொருள் விளக்கம், இதுவே கட்டளை, இப்படி நீ நடப்பாயாக! இப்படியே நடப்பாயாக!"

ஒரு நாட்டில் கல்வி கற்றவர்கள் எல்லாரும் மேற்கண்டவாறு உண்மையே பேசி, தரும வழியில் நின்று, ஓதுதலை விடாமல், வாழ்க்கை நடத்தினார்களானால் பின் அந்த நாட்டுக்கு வேறென்ன வேண்டும்?

குருகுல வாசம் முடிந்ததும், 'குடும்ப வாழ்க்கையின் பொறுப்பை எடுத்துக்கொண்டு ஏன் கஷ்டப்பட வேண்டும்? கவலையற்று இன்னும் படித்துக் கொண்டே சுகமாக இருக்கலாம்' என்று யோக்கியமான சீடர்களும் எண்ணக்கூடும். குருகுலக் கட்டுப்பாடும் நியமங்களும் முதலில் கஷ்டமாகத் தோன்றினும், வழக்கப்பட்டபின் அதிலேயே மனம் ஈடுபட்டுப் போய், குடும்ப வாழ்க்கையின் பாரங்களும் கவலைகளும் வேண்டாம் என்று தோன்றுவது சகஜம். இக்காலத்து மாணவர்களுக்குள்ளும் இந்த மனப்பான்மை உண்டாவதைச் சிலசமயம் பார்க்கிறோம். இதையறிந்தே உபதேசத்தில், "குருதக்ஷிணை கொடுத்து முடிந்ததும், "சந்ததி என்ற நூல் அறுபட்டுப் போகாமல் காப்பாயாக" என்று சொல்லுகிறார்; அதாவது, "விவாகம் செய்துகொண்டு உன் முன்னோர்களுடைய பரம்பரை அறுந்து போகாமல் இல்லறம் நடத்து" என்று பொருள். விவாகத்தில் நம் முன்னோர்கள் அறிந்த பயன் இதுவே. காதல் இன்பமோ, உடல் உணர்ச்சி என்ற மிருகத்திற்குச் செய்யும் பூஜைக்கிரமமோ அல்ல, விவாகமும் இல்வாழ்க்கையும்; சமுதாயத்திற்கு நாமும் நம்முடைய

குலமும் செய்யவேண்டிய சேவை உண்டு. அதைச் செய்வதற்குரிய பிரஜைகளை நிரந்தரமாக நாம் கொடுக்கவேண்டும் என்பதே விவாக தத்துவம்.

உபதேசத்தின் அடுத்த பாகத்தில், சத்தியத்தையும் தருமத்தையும் வழுவாமல் கடைப்பிடித்து நலனும் செல்வமும் திரட்டு என்கிறார். ஆனால் அந்த வாழ்க்கையிலும் ஓதுவதும் ஓதுவித்தலும் மறக்கப் படாது என்று நினைவூட்டுகிறார்.

இரு முதுகுரவர், ஆசாரியர், விருந்தினர் இவர்களைத் தெய்வமாகக் கருதுதல் மிகப் பழைய பேச்சு. ஆயினும் இதுவே நம்முடைய நாட்டின் தனிச் சிறப்புக்கொண்ட விநய சம்பத்து. இது நம்முடைய தற்காலக் கல்வியால் பழுதுபட வேண்டிய அவசியமில்லை.

தரும முறையில் நடத்தப்படும் வாழ்க்கையில், கொடுப்பது என்பது ஒரு பெரிய அத்தியாயம். இதுவும் நம்முடைய நாட்டு விநயத்தில் இன்றியமையாத தனிச்செல்வம். 'கொடுப்பதைச் சிரத்தையுடன் கொடு: சிறப்பாகக் கொடு. கொடுப்பதில் லோபித்தனம் காட்டாதே; இகழ்ந்தோ, உதாசினமாகவோ கொடாதே: கொடுக்கும் சக்தி உனக்கு வாய்த்தது என்று கர்வம் கொள்ளாதே: கொடுப்பதைப் பலர் அறிந்து மெச்சுமாறு டாம்பீகம் செய்யாதே: உன் கொடையைப் பெறுகிறவர்கள்பால் அன்பும் பய பக்தியும் கொண்டு நடந்துகொள்வாயாக' என்கிறார். கொடுப்பது என்பது பிச்சை ஒன்றேயல்ல. எவ்

வித உபகாரமும் அதில் அடங்கும்; ஆகையால் இந்த எச்சரிக்கைகள் எல்லா விஷயங்களிலும பொருந்தும்.

எது செய்யத்தக்கது, எது தகாதது என்பதை யறியும் வழியைப்பற்றி இந்த உபதேசத்தில் சொல்லியிருப்பது மிகவும் கவனிக்கத் தக்கது. ஐயம் தீர்ப்பதற்குப் பிரமாணம் நல்லோர் வாழ்க்கையே. அதிலும், அறவழியில் நிற்பது மட்டும் போதாது; நெகிழ்ந்த மனமுடைய பெரியோர்களைப் பின்பற்று என்றார். தரும சாஸ்திர அறிவினல் இரக்க மின்மை உண்டாவது ஓர் அபாயம். தருமப்பற்றும், தயையும் இரண்டும் கொண்ட அந்தணர்களின் வாழ்க்கை முறையைப் பார்த்து ஐயத்தைத் தீர்த்துக்கொள் என்றார். கேட்டு அறிந்து அல்ல; அவர்கள் செய்வதைப்போல் நீயும் செய் என்றார். மாணவர்களுக்கு எவ்வளவு அழகான பொன்போன்ற முடிவுரை!

12

சில தருமநூல் தோற்றுவாய்கள்

நசிகேதன் தன் தகப்பனர் நடத்திய யாகத்தில் யமனுக்குத் தக்ஷிணையாகக் கொடுக்கப்பட்டு, யமாலயம் சென்று அங்கே தரும தேவதையிடம் ஆத்மரகசிய உபதேசம் யாசித்த கதை முன்னர் சொல்லப்பட்டது.

பையனுடைய தீரத்தைக்கண்டு யமன் மகிழ்ந்து நீண்ட ஆயுளும் எல்லா உலகபோகங்களும் தருவதாகச் சொன்ன போதிலும் ஒப்புக்கொள்ளாமல், உபதேசமே வேண்டும் என்று நசிகேதன் பிடிவாதமாக வணங்கி நின்றான். விஷயத்துக்குத் தக்க ஆசாரியனும், ஆசாரியனுக்குத் தக்க சீடனும் இவ்வாறு வாய்ந்து கடோபநிஷத்து உபதேசிக்கப்பட்டது. கடோபநிஷத்து என்பது மிகவும் போற்றப்பட்ட வேதாந்த நூல்.

நம்முடைய முக்கியமான தருமநூல்கள் ஒவ்வொன்றும் மனதைக் கவரும் ஒரு தோற்றுவாயுடன் அமைந்து நிற்கிறது. இராமாயணத்தின் தோற்றுவாய் கேட்டிருப்பீர்கள். ஆற்றங் கரை

யில் அன்றில் பறவைகள் இரண்டு, மகிழ்ந்து விளையாடிக் கொண்டிருந்த சமயம், தன் பசிக்காக வேடன் ஒருவன் அவைகளிலொன்றைக் கொன்ருன். பெண் அன்றில் ஆருத் துயரத்துடன் தத்தளித்தது. இதைப் பார்த்து இதயம் கரைந்த வால்மீகி முனிவர் அவரும் அறியாமல், "வேடனே! ஏன் இவ்வாறு செய்தாய்? நீ ஒருநாளும் ஒரு சுகமும் அடையாமல் போவாயாக" என்று சோகமும் கோபமும் நிறைந்த ஒரு பாட்டுப் பாடினர்.

உடனே அவர், ஒருபக்கம் இவ்வாறு சபித்து விட்டோமே என்று தம் கோபத்தைக்கண்டு தாமே பயந்தார். மற்ருெரு பக்கம், தம் வாயில் தம்மையும் அறியாமல் வெளிவந்த பாட்டின் அழகைக்கண்டு ஆச்சர்யத்தில் மூழ்கி அப்பாட்டைத் திருப்பித் திருப்பிப் பாடினர். அதன்பின் நாரதர் சொற்படி அந்தப் பாட்டின் சந்தத்திலேயே இராமாயணக் கதையை முதல் முதல் பாடினராம். இதுவே வால்மீகி ராமாயணத்தின் தோற்றுவாய்.

போர்க்களத்தில் திடீர் என்று சந்தேகமும் மனச் சோர்வும் தோன்றி, வில்லைக் கீழே போட்ட அருச்சுனனுக்கு, கடிவாள வாரும் கையுமாய், கண்ணபிரான் பகவத்கீதையை உபதேசித்தார் என்பது கீதையின் தோற்றுவாய்.

இந்திரியங்களையும் மனதையும் அடக்கி, பற்றற்ற உள்ளத்துடன் கருமங்களைச் செய்வது பகவத்கீதையின் உபதேசம். உடலைத் தேராகவும்,

இந்திரியங்களைக் குதிரைகளாகவும், இந்திரியங்களைச் செலுத்தும் மனதைக் கடிவாள வாராகவும், புத்தியைச் சாரதியாகவும், புலன்கள் செல்லும் விஷயங்களை ரதம் ஓட்டும் பாதையாகவும் அமைத்து உபநிஷத்தில் ஒரு சிறந்த உவமை சொல்லப் பட்டிருக்கிறது. சாரதியைக்கொண்டு குதிரைகளைச் சரியாக இழுத்துப் பிடித்து ரதத்தை ஜாக்கிரதையாகச் செலுத்தினுல், எஜமானனுகிய ஆத்மாவின் யாத்திரை முடியும். இல்லையேல், குதிரைகள் கண்டவாறு ஓடி, பிறப்பும் இறப்புமாகச் சுற்றிச் சுற்றிப் போய்க் கொண்டிருக்க வேண்டியதாகும் என்று கடோபநிஷத்து சொல்லுகிறது. இந்தப் பழைய உவமையைக் கருதி, தேரோட்டும் தோற்றுவாய் பகவத் கீதையின் கர்மயோக உபதேசத்திற்கு மிகவும் பொருத்தமாய்ப் பொருள் செறிந்து அமைந்திருக்கிறது.

யமாலயத்தில் தரும தேவதை உபதேசித்ததாகக் கடோபநிஷத்தில் அமைந்திருக்கும் தோற்றுவாயும் மிகவும் பொருத்தமானதே. இந்த உபநிஷத்தின் விஷயம், ஆத்மா எவ்வாறு உடலுக்குச் சம்பந்தப்பட்டிருக்கிறது என்பது. உடலினின்று உயிரைப் பிரித்து எடுத்தேகும் யமதேவனைக் காட்டிலும் வேறு யார் ஆத்ம ரகசியத்தை அறிந்து உபதேசிக்க முடியும்? ஆகையால் யமனையே ஆசாரியனுக அமைத்து இந்த உபநிஷத்து சொல்லப் பட்டது.

இன்னொரு விதமாகப் பார்த்தாலும், ஆத்ம தரிசனம் பெறுவது யாருக்கு முடியும்? புலன்களால் அடையும் போகங்களைப் பொருட் படுத்தாத நசிகேதனைப் போன்ற தீரனுக்குத்தான் முடியும். மாசற்ற மனதை எடுத்துக்காட்டச் சீடன் இளவயதாகவும் அமைக்கப்பெற்றான்.

ஆசைகளை யொழித்துப் பற்றுக்களைக் களைந்தா லொழிய அறிவினாலும், வேதம் ஓதுதலினாலும், புலவர்களிடம் ஆராய்ச்சிகள் கேட்பதனாலும், மயக்கம் தீராது: ஆத்ம தரிசனம் அடைய முடியாது. தகப்பனார் செய்த யாகத்தைப் பூரணமாக்கப் பசுக்களுடன் தன்னையும் ஒரு தக்ஷிணையாகக் கொடுக்கச் சொல்லி, யமாலயம் சென்று, அங்கே யமன் தருவதாகச் சொன்ன மற்ற வரங்களை வேண்டாம் என்று சொன்ன வரலாறு, பக்குவ மடைந்தவன் அடையக்கூடிய ஞானோபதேசத்திற்கு மிகச் சிறந்த தோற்றுவாயாக விளங்குகிறது.

13

மரக்கட்டைக்குள் மறைந்துள்ள நெருப்பு

தீக்குச்சியைத் தேய்த்து இக்காலத்தில் நாம் நெருப்பு உண்டாக்கிக் கொள்வதுபோல், நம் முன்னோர்கள் ஒரு மரக்கட்டையின்மேல் மற்றொரு மரக்கட்டை வேகமாக உராயுமாறு கடைந்து, நெருப்பு உண்டாக்கிக் கொண்டுவந்தார்கள். இந்தத் தீக்கடை கோலுக்குப் பெயர், 'அரணி'. ஆத்மா என்பது எத்தகைய பொருள், அது தேகத்திற்குள் எவ்வாறு மறைந்து நிற்கிறது, உடலுக்கும் ஆத்மா வுக்கும் என்ன சம்பந்தம் — முதலிய விஷயங் களை யமன் நசிகேதனுக்கு உபதேசம் செய்யும் போது, அரணியை உவமையாக வைத்துச் சொல்லுகிறான்.

அரணியைக் கடைந்தால் நெருப்புக் கிளம்பு கிறது. இந்த நெருப்பு, அது வெளிப்படுவதற்குமுன் எங்கே, எந்த உருவமாக இருந்தது? இல்லாத தொன்றை நாம் உண்டாக்க முடியாதே? ஆகை யால், மரக்கட்டைக்குள் தீ முன்னரே இருந்தது;

மறைந்து நின்றது. தாய் தன் வயிற்றுக்குள் கருவை வைத்துக் காப்பதுபோல் அரணியானது தீயைத் தனக்குள் வைத்திருக்கிறது. ஒளியும், அனலும், சக்தியும் கொண்ட தீ எவ்வாறு மரக்கட்டையினுள் மறைந்து நிற்கிறதோ, அவ்வாறே பிரகாசம் பொருந்திய, அழிவிலா ஆத்மா உடலினுக்குள் அடங்கி மறைந்து நிற்கிறது.

மரக்கட்டையினுள் தங்கியிருக்கும் வரையில் அக்கினியானது வடிவமின்றி நிற்கிறது. ஆயினும் அதுவே வடிவுகொண்டு வெளிவந்து, விளக்கிலும், அடுப்பிலும், உலையிலும், தினசரி வாழ்க்கையில் உதவுகிறது. அதுவே ஓமாக்கினியாகி நம்முடைய பூஜையையும் நாம் இடும் அவிசுகளையும் பெறுகிறது.

உராய்ந்ததும் வெளிவருமாறு எந்த மரக்கட்டையிலும் ஒரே தன்மையான அக்கினி மறைந்து நிற்கிறது. அதைப்போலவே எல்லா உயிர்களிலும் ஒரே தன்மையான **அந்தராத்மா** குடிகொண்டிருக்கிறது. எந்தப் பொருளைத் தீயானது பற்றுகிறதோ அந்தப் பொருளின் வடிவத்தையே கொண்டு அது தோற்றப்படுகிறது. விளக்காகவும், அடுப்புத் தீயாகவும், உலை நெருப்பாகவும், காட்டுத் தீயாகவும், இன்னும் எரியும் பொருள்களுக் கேற்றவாறு, பல வடிவம் கொள்ளும் அக்கினியைப்போல், அந்தராத்மா ஒரு தன்மையான பொருளே யாயினும் பல வடிவங்களாகத் தோற்றப்படுகிறது. அநேக விதமான

பாத்திரங்களை நிறைத்துத் தங்கும் வாயு, தான் தங்கும் பாத்திரத்தின் வடிவத்தைக் கொண்டு வேறுபட்டாலும் அது ஒரே தன்மையான பொருளாகும். தன் ஒருமையை அது இழக்கவில்லை. அதுபோலவே அந்தராத்மாவும் பற்பல உடல்களில் தன் தன்மையை இழக்காமல் வேறுபட்ட தோற்றங்களாகிறது. நெருப்புக்கு இரையாகும் பொருள் வேறு, நெருப்பு வேறு; வாயு வேறு, பாத்திரம் வேறு; உயிர்கள் வேறு, அவைகளினுள்ளூடி நிற்கும் அந்தராத்மா வேறு. வேறுபட்ட தோற்றங்களுக்குப் பின் உயிர்களுள் மறைந்து நிற்கும் ஒருமையைக் காண்பதே ஞானம்.

* * * *

ஞாயிற்றின் ஒளியிலோ, சந்திரன் நிலவிலோ வேறு வெளிச்சத்தைக் கொண்டோ, பொருள்களைப் பார்க்கிறோம். ஆயினும் சூரியனும், சந்திரனும், மீனும், மின்னலும் தரும் ஒளியானது, கண்ணுக்குள் படைத்த உணர்வெனும் ஒளியில்லையேல், என்ன பயன்படும்? பொருள்களைப் பார்ப்பது, உள்ளத்துள் நாம் படைத்த ஒளியே யல்லாது, சூரியன் தரும் ஒளியல்ல. ஒளிக்கெல்லாம் ஒளியாகி நம்முள் நிற்கும் இந்தப் பேரொளியே அந்தராத்மா.

இந்த அந்தராத்மா தானாக ஒளிர்கிறதா? அல்லது ஈசுவரனுடைய ஒளியினால் பிரகாசிக்கிறதா? இதை எவ்வாறு அறிவேன் என்கிறான் யமன்.

कथं नु तद्विजानीयां किमु भाति विभाति वा ॥
கதம் நு தத்விஜானீயாம் கிமு பாதி விபாதிவா =

இவ்வாறு யமனே உபதேசத்தின் ஒரு பகுதியை முடிக்கிறான். ஆத்மா வேறு, பரமாத்மாவேறு? அல்லது இரண்டும் ஒரு தன்மையை உடைய இரு பொருள்களா? அல்லது இரண்டும் ஒன்றேயா?— என்ற கடினமான கேள்விகளைப் பண்டிதர்களுக்கு விட்டுவிட்டு, ஒவ்வொரு ஜீவனுக்குள்ளும் பரமாத்மா வசிக்கிறான் என்கிற பேருண்மையை நன்கு உணர்ந்து, அந்த அறிவை உள்ளத்தினுள் பதியவைத்து, அது உள்ளத்தில் வேரூன்றி உயிர் கொண்டு நிற்கச் செய்வதே ஞானம். உயிரற்ற அறிவினால் பயனில்லை. உயிர்கொண்ட ஞானமோ உள்ளத்தில் வேர்கொண்டு, இலையும், பூவும், காயும், கனியும் தரும். மனதில் சாந்தியும், நற்செயலும், நல்லெண்ணங்களும் உண்டாகும். அவை உயிர் கொண்ட அறிவின் பூவும், கனியுமாகும்.

14

சாப்பாட்டில் குற்றம் சொல்லவேண்டாம்

अन्नं न निन्द्यात् तद्व्रतम् ॥
அந்நம் ந நிந்த்யாத் தத்வ்ரதம் |

“உண்ணும் உணவைப் பழித்தலாகாது: இது விரதமாகும்” என்று தைத்திரீய உபநிஷத்தில் பிருகுவுக்கு அவர் தகப்பனர் உபதேசிக்கிறர்.

தற்காலத்து வைத்திய சாஸ்திரப் புலவர்களும் இதையே சொல்வார்கள். ஆகாரம் உட்கொள்ளும் சமயத்தில் அதைப் பழித்தலோ, குறைகூறலோ, சந்தேகித்தலோ ஆரோக்கிய முறையாகாது. சாப்பிடும்போது, இது நல்லது, இது ஜீரணமாகிவிடும், இது எனக்கு ஆரோக்கியம் தரும், பலம் தரும், உள்ளத்தையும் சுத்தமாக்கும் என்றே எண்ணி உணவை உட்கொள்ளவேண்டும் என்பது ஆரோக்கிய சாஸ்திர நியதி. நாம் எண்ணும் எண்ணங்களுக்கு அதிக சக்தி உண்டு. புசிக்கும்போது நாம் கொள்ளும் நம்பிக்கையே உணவை நல்லதாகவும் தீயதாகவும் செய்யும்.

ஜீவன்கள் அனைத்தும் உணவிலிருந்து உண்டாகின்றன. ஜீவன்களின் உயிரைத் தாங்குவதும் உணவேயாகும். இவ்வளவே யல்ல. ஜீவன்கள் அனைத்தும் முடிவில் உணவாகவே முடியும். ஒவ்வொரு தாவர வகையும் பிராணி வகை ஜீவனும் வேறு தாவர ஜங்கம உயிர்களுக்கு ஆகாரமாய் முடியும் என்பதை ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தால் அறிவோம். வேரூன்றி வளரும் செடி முதலிய உயிர்களும், ஊர்ந்தும் பறந்தும் நடந்தும் செல்லும் எல்லாப் பிராணி வகைகளும், தம் உடல்களை ஒன்று மற்றொன்றுக்கு உணவாகவே உதவுகின்றன. இதுவே சிருஷ்டி அமைப்பு.

சிருஷ்டியிலுள்ள அனைத்தையும் உண்டாக்கிக் காப்பாற்றி, ஒன்றுக்கொன்று இன்றியமையாத சம்பந்தமுமாகின்ற இந்த 'உணவு' என்னும் பொருளிலே பிரம்மத்தைக் காணலாம் என்பது உபதேசம்.

"அதோ அந்த மாமரத்தின் வடக்குக்கிளையைப் பார். அதன்மேலிருக்கும் ஏழு நட்சத்திரங்களுக்குப் பெயர் சப்த ரிஷி. அதில் வால்போல் நீண்டு கிடக்கும் மூன்று நட்சத்திரங்களைப் பார்" என்று இவ்வாறு படிப்படியாகப் பையனுக்குச் சொல்லி, அருந்ததி நட்சத்திரத்தைக் காட்டுவதுபோல் உணவின் பேரிரகசியத்தை விளக்கி, அதிலிருந்து படிப்படியாகப் பிரமத்தைமுனிவர் உபதேசிக்கிறார்.

உலக சிருஷ்டி யனைத்யையும் ஒன்றுக்கொன்று பிணைத்துக் கட்டும் உணவு என்ற சிறந்ததொரு பொருளை அலட்சியம் செய்யலாகாது. அதன் அருமையை அறிந்து மதித்தல் வேண்டும்.

अन्नं न परिचक्षीत तद्व्रतम् ॥

"அன்னம் ந பரிசக்ஷீத தத்வ்ரதம்"

"உணவை எறியலாகாது; இது விரதம்." உணவு நன்ருயில்லை என்று தள்ளக்கூடாது. நன்ருயிருந்ததையும் அளவுக்கு மிஞ்சிப் பரிமாறிக் கொண்டு பிறகு எறியக்கூடாது. உணவை வீணுக்குதல் கூடாது. மிக்க அருமையான பொருளை அலட்சியம் செய்யவாவது வெறுத்தலாவது ஒழுக்கமாகாது. உயிரைக் காப்பாற்றக்கூடிய உணவுப் பொருளைக் காட்டிலும் அருமையான பொருள் உலகத்தில் உண்டோ?

இந்த முக்கியமான ஒழுக்க முறையை இப்போது நம் நாட்டில் ஜனங்கள் உணரவில்லை. பல்லாயிர வருஷங்களுக்கு முன் வேதாந்த ஞானத்தில் ஒரு பாகமாக உபநிஷத்திலுங் கூடச் சொல்லி விளக்கப்பட்டதாயினும் அதை இன்னும் கவனியாது மூடர்களைப்போல் நாம் நடந்து கொள்ளுகிருேம். வேண்டிய அளவுக்கு மேலும், வேண்டாதவைகளையும், வற்புறுத்தி வற்புறுத்திப் பரிமாறுவதும், வற்புறுத்துதலை எதிர்பார்ப்பதும், உணவு முடிந்து எறியும் இலைகளில் ஏராளமான தின்

பண்டங்கள் கிடப்பதும் நம் நாட்டின் கெட்ட வழக்கமாகி வருவதைப் பார்க்கிறோம்.

அன்னம் ந நிந்த்யாத் |
அன்னம் ந பரிசக்ஷீத ||

என்ற உபநிஷத்து உபதேசத்தை நாம் இப்போதாவது கவனித்து வழக்கத்தைத் திருத்திக்கொள்ள வேண்டும்.

"உணவை ஏராளமாக உண்டாக்குவாயாக" என்றும் முனிவர் உபதேசம்.

अन्नं बहु कुर्वीत तद्व्रतम् ॥

"அன்னம் பஹு குர்வீத தத்வ்ரதம்"

"சோர்வு கொள்ளாதே. உனக்காக மட்டும் உணவு உண்டாக்கினால் போதாது. நாட்டுக்குப் பயன்படுமாறு உணவு ஏராளமாக உண்டாக்கு" என்கிறார் முனிவர். இதைவிட உயர்ந்த பொருளாதார உபதேசம் என்ன வேண்டும் ? சமுதாயத்திற்கு உழைப்பாயாக; உணவு ஏராளமாக உண்டாக்குவதே சமூகத்திற்குச் செய்யும் பேருதவி; பொருளை உண்டாக்கும் முயற்சிகளை எப்போதும் செய்வாயாக; சோர்வு வேண்டாம்; இதுவே ஒழுக்கம்" என்பது உபநிஷத்து வாக்கியம்.

இவ்வாறு பொருளை உண்டாக்குவாயாக என்று உபதேசித்துவிட்டுத் தொடர்ந்தாற்போல் சொல்லுவதையும் கவனிக்கவேண்டும். பொருள்

உண்டாக்குவது உனக்காக அல்ல, மற்றவர்களுக் காக:

न कंच न वसतौ प्रत्याचक्षीत तद्व्रतम् ॥

"ந கஞ்ச ந வஸதௌ ப்ரத்யாசக்ஷீத தத்வ்ரதம்"

அதாவது, 'எவருக்கும் இடமில்லை என்று சொல்லாதிருப்பாயாக, இதுவே ஒழுக்கம்.' வந்த விருந்தினருக்கு, இல்லை என்று சொல்லக் கூடாது. சோர்வற்ற முயற்சியைக் கொண்டு, ஏராளமான உணவுப் பொருள்களை உண்டாக்கி, அதை வீண் செய்யாமல் காப்பாற்றி வைத்தால், வந்த விருந் தினரை, போ என்று சொல்ல வேண்டிய அவசிய மிராது. பொருளில்லை என்ற தரித்திரத்தின் கஷ்டம் இராது. முயற்சியின் பயனுகச் செல்வம் படைத்து சிக்கனமாக வாழ்ந்தால், உலோபித்தனம் வந்து மனதைக் கவர்ந்துகொள்ளப் பார்க்கும்; அது கூடாது. வந்த விருந்தினரைப் போ என்று சொல் லாதே; எவருக்கும் இடம் கொடுப்பாயாக; அதுவே ஒழுக்கம்—என்கிறார் முனிவர்.

எல்லாவற்றையும் சேர்த்துப்பார்த்தால்,

உண்ணும் உணவில் குற்றம் காணவேண்டாம்
ஏராளமாக உணவுப் பொருள் உண்டாக்கு :
உணவை வீணுக்காதே :
அனைவருக்கும் அன்னம் இடு :

என்பது உணவைப்பற்றி உபநிஷத்தின் உபதேசமாகும்.

15

உலர்ந்த கட்டையும் துளிர்த்துவிடும்

"மறை" என்ருல் மறைந்து நிற்கும் பரம் பொருளை விளக்கும் நூல் என்று பொருள். மறைத்து வைக்கவேண்டிய நூல் என்றல்ல.

"இந்த உபதேசத்தை ஒரு உலர்ந்த கட்டையின் மேல் நீ தெளித்தாயாஞலும் அது துளிர்த்து இலையுங் கிளையும் கொள்ளும்" என்று சத்தியகாம ஜாபாலர் சாந்தோக்கியத்தில் ஒரு அத்தியாயத்தை முடிக்கிருர்.

உண்மையில் ஜீவிய சக்தியை இது எவ்வளவு அழகாக எடுத்துக் காட்டுகிறது! உலர்ந்த கட்டையும் உயிர் கொண்டு தழைக்கும் என்ருல், புத்திமானுக்கு அறிவு ஊட்டி உய்விக்கும் என்று சொல்லவேண்டியதில்லை.

உண்மையின் சக்தி இவ்வாருயினும், போதன முறையில் நம்முடைய முன்னேர்கள் சில நிபந்தனைகளை வைத்திருந்தனர். காலத்துக்கு ஏற்றவாறு முறைகளை மாற்ற வேண்டியதாயினும், பழைய

நிபந்தனைகளை ஆராய்வதில் பயனுண்டு. அவைகளில் காணும் சில தத்துவங்கள் என்றைக்குமே பொருந்தும்.

நம்முடைய முன்னோர்களுடைய முக்கியமான கொள்கை ஒன்று என்னவென்றால், சிக்கலான விஷயங்களை ஆசாரியன் சொல்ல, பக்தியுடன் சீடர்கள் நேரில் கேட்டால்தான் உண்மைகள் சரியாக விளங்கும்; எழுத்துவாயிலாக உபதேசம் சரிவரப் பெறமுடியாது என்பது.

உபநிஷத்து என்று பெயர்கொண்ட நூல்கள் வெறுங் குறிப்புக்களாகவே யாக்கப்பட்ட நூல்களெனக் கருதலாம். நேரில் கேட்டு உபதேசம் பெற்ற சீடர்கள் தாம் கற்றறிந்ததை, பிறகு வேண்டும்போது நினைவுக்குத் தந்துகொள்ள இக்குறிப்புக்கள் உதவுமே யொழிய, அக்குறிப்புக்களைக் கொண்டே ஞானம் பெறமுடியாது.

இக்காலத்திலும் பள்ளிக்கூடங்களில் நடைபெறும் முறையைக் கவனித்தால், உபாத்தியாயர்கள் சொல்லி மாணவர்கள் எழுதிக் கொள்ளும் குறிப்புக்களும் இவ்வாறே என்பதைக் காணலாம். கலாசாலைகளில் உபாத்தியாயர்கள் சொல்லும்குறிப்புக்களை அச்சடித்துப் புத்தக வடிவமாக வழங்கிவிட்டு நேரில் புலவர்கள் விளக்கிச் சொல்லுவதைக் கேட்கக் கலாசாலைக்குப் போகாமல் நின்றுவிட முடியாது. அத்தகைய குறிப்புக்களை அச்சிடுவதே

கூடாது என்பார்கள். புலவர்கள் விளக்கியதை நேரில் கேட்ட மாணவர்களுக்குத்தான் அக் குறிப்புக்கள் பயன்படும். இந்த உண்மையை யறிந்தே முற்காலத்திலும் சாஸ்திரங்களைக் குருவிடம் நேரில் உபதேசம் பெற்றுப் படிப்பதுதான் முறை என்று பெரியோர்கள் விதித்தார்கள். அக்காலத்தில் அச்சு கிடையாது. ஆகையால் மனனத்திற்குச் சவுகரியமாக உபதேசக் குறிப்புக்களைச் சந்தம் பொருத்தியாத்து முனிவர்கள் பாடினார்கள். பழைய விஷயங்களை விமரிசனை செய்யும்போது பழைய காலத்திய நிலைமையை நன்ருகக் கவனித்தல் வேண்டும். இதற்கு வேண்டிய கற்பனுசக்தி இல்லாதவர்களால் விஷயங்களை ஆராய்ச்சி செய்ய இயலாது.

உபநிஷத்து முதலிய சாஸ்திரங்களை முற்காலத்திய அறிஞர்கள் மறைத்து வைத்துக்கொண்டு பொது ஜனங்களுக்குத் தாராளமாக விநியோகிக்காமல் உலோபிகளாக நடந்து கொண்டார்கள் என்று சிலர் தவருக எண்ணுவதுண்டு. மருந்துகளை வைத்தியர்கள் மிக ஜாக்கிரதையாகத்தான் வைத்து வழங்குவார்கள். மருந்தை அறிந்து உபயோகித்தால் அது அமிருதம் போன்ற பொருளாகும். ஆனல், அதுவே அறியாதவர்கள் கையில் அபாயமான விஷமாகும். அத்தியாத்ம உண்மைகள் பக்குவமும் தகுதியும் பார்த்தே உபதேசம் செய்யத் தகும். தீர விளங்காத விஷயங்கள் தவருன பொருளும் பயனும் கொண்டு தீமைக்கு ஏதுவாகும்.

முற்காலத்திய போதனு முறை நிபந்தனைகளை உபநிஷத்துக்களில் காணலாம். சீடன் ஆசாரியரிடம் அன்பும் பக்தியும் கொண்டு அவருக்குச் சேவை செய்வதையே முக்கிய காரியமாகக் கருதவேண்டும் என்று சொல்லப்படுகிறது. அவ்வாறு செய்தால் தான் அவருடைய உள்ளமும் சீடனுடைய உள்ளமும் ஒன்ருகச் சேர்ந்து, அவர் செய்யும் உபதேசத்தின் பொருள் விளங்கி, வேர் ஊன்றிப் பயன் பெறும். குருவுக்குச் சேவை செய்வதே பிரமசாரியின் முதல் கடமை. சேவை செய்து மிகுந்த நேரத்தில் உபதேசம் பெறவேண்டும் என்பது விதி. தற்காலத்தில் இது வியப்பாகத் தோன்றும். ஆயினும் இதில் ஒரு தத்துவம் அடங்கியிருக்கிறது. சரியான மனப்பான்மைக்கு அத்தாட்சியும் ஏதுவுமான சேவையால் சீடனைப் பரீட்சையும் பக்குவமும் செய்தே உபதேசம் தரவேண்டும்.

குருவுடன் வாசம் செய்யும் சீடனுக்கே உபதேசம் செய்யவேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. தகப்பனிடம் அல்லது ஆசாரியனிடம் ஒரு வருஷகாலமாவது குருகுலவாசம் செய்த சீடன் உபதேசம் பெறலாம். மற்றவர்களுக்கு உபதேசிக்க வேண்டாம் என்று பல இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. வேறு இடத்தில் குடியிருந்துகொண்டு, படிப்புக்கு மட்டில் குருவிடம் போய் உபதேசம் பெறுவதில் பயனில்லை. தற்காலத்திய கல்வி முறைப் புலவர்களும் இதையே சொல்வார்கள்.

தான் அறிந்ததைப் பிறருக்கு முறைப்படி உபதேசம் செய்யவேண்டியது உபதேசம் பெறும் சீடனது கடமை. அவ்வாறு செய்யும் எண்ணங் கொண்டவனுக்கே உபதேசம் செய்யவேண்டும் என்று உபநிஷத்துக்களில் விதிக்கப்பட்டிருக்கிறது. கல்வி கேள்விகளின் காப்புக்கும் வளர்ச்சிக்கும் இந்த விதி மிக முக்கியமானது. பிறருக்குக் கொடுக்க உத்தேசிப்பவனுக்கே கல்விச் செல்வம் வழங்க வேண்டும்.

சீடன் சமூகத்தின் கட்டுப்பாட்டுக்கு அடங்கிய வனாக இருக்கவேண்டும். சமூக பழக்க வழக்கங்களை நிராகரித்தவனாக இருக்கக் கூடாது. தன் கடமை களைச் சரியாகச் செய்திருக்க வேண்டும். உபதேசம் பெறுவதற்கு முந்தி படித்து முடித்திருக்கவேண்டி யதை யெல்லாம் குறைவின்றிப் படித்திருப்பதோடு கோபத்தையும் ஆசைகளின் வேகத்தையும் அடக் கினவனாக இருக்கவேண்டும். குணசீலனாக இல்லாத வனுக்கு உபதேசம் செய்யக்கூடாது.

நல்ல பெருந்தன்மை கொண்டவனும், தெய்வ பக்தி யுள்ளவனும், குருவை தெய்வம்போல் கருதி பக்தி செலுத்துபவனுமான சீடனுக்குச் சொன்னால் உபதேசத்தின் பொருள்கள் ஒளிபெற்று விளங்கும் என்பது உபநிஷத்து வாக்கியம்.

நல்ல குடும்பத்தைச் சேர்ந்த ஆசாரியனிடத் தில் பெற வேண்டிய உபதேசத்தைப் பெற்று,

முறைப்படி பிரமசரியம் முடிந்தபின் விவாகம் செய்துகொண்டு இல்லறம் நடத்தி இல்லற வாழ்க்கையிலும், கற்றதை மறக்காமல் கிரமமாகச் சிந்தனை செய்துகொண்டு வந்து, நல்ல குழந்தைகளைப் பெற்று, குடும்பக் கடமைகள் முடிந்தபின் புலன்களை அடக்கி ஜீவகாருண்ய விரதம் பூண்டு வாழ்க்கைப் பிரயாணத்தை முடிக்கவேண்டும் என்பது நம்முடைய முன்னோர்களின் கொள்கை. மரணம்வரையில் குடும்பப்பற்றையும் அதனாலுண்டாகும் கவலைகளையும் வைத்துக் கொண்டிருக்கக் கூடாது. கல்விப்பருவம், இல்லறப்பருவம், தவப் பருவம் என ஆயுள் நாளைப் பங்கிடுதல் வேண்டும். அவ்வாறு வகுத்துக்கொண்டு கடமைகளைக் கவனித்தால் அறிவும் ஆற்றலும் பெற்று, அவ்வப்பருவக் கடமைகளையும் சரிவரச் செய்வோம்.

16

தண்ணீர்க் குடத்தில் கண்ட 'ஆத்மா'

"ஆத்மாவைப் பசி, தாகம், சோகம், மூப்பு, மரணம், பாவம், எதுவும் தீண்டா. ஆத்மாவே அறியத்தக்க பொருள். அதை யறிந்தபின் எல்லா இன்பங்களையும் பதங்களையும் அடைந்தவாறே யாகும்."

இவ்வாறு பிரஜாபதி சொன்னதாகக் கேள்விப்பட்ட தேவர்களும், அசுரர்களும் 'சரி, சகல லோகங்களும் சகல இன்பங்களும் தரக்கூடிய இந்த ஆத்மாவை எப்படியாவது அடையவேண்டும்' என்று தீர்மானித்தார்கள்.

தேவர்களுக்காக இந்திரனும், அசுரர்களுக்காக விரோசனனும் தனித்தனியாகப் புறப்பட்டு, சமித்தும் கையுமாகப் பிரஜாபதியிடம் போய் வணங்கி நின்றார்கள். பழைய காலத்தில் உபதேசத்திற்காகக் குருவிடம் சீடர்கள் போகும் முறை இதுவே.

பிரமசரிய விரதம் பூண்டு பல வருஷங்கள் குருகுலத்தில் வசித்தார்கள். பிறகு ஒரு நாள் குரு, "என்ன தேடிவந்தீர்கள்?" என்று கேட்டார்.

"ஐயனே! மூப்பு, மரணம், சோகம், பசி, தாகம் இவையேதும் தீண்டாத ஆத்மா ஒன்று உண்டென்றும், அதுவே அறியத்தக்கதும் அடையத் தக்கதுமான பொருள் என்றும், அதை ஒருவன் அடைந்துவிட்டால் எல்லாப் பதங்களும் பேரின்பங்களும் அடைவான் என்றும், தாங்கள் சொன்னதாகப் பேசிக் கொள்ளுகிறார்கள். அந்தப் பொருளைக் காணவந்தோம்! ஆத்மா என்பது எது?" என்றார்கள்.

இதைக் கேட்ட பிரஜாபதி, "கண்களுக்குள் தோற்றப்படுபவனே ஆத்மா" என்றார். இது ஒரு பழைய மந்திரம். இதன் பொருள், கண்களை மூடித் தியானத்தில் அமர்ந்தால் காணப்படும் புருஷனே ஆத்மா என்பதாம். சீடர்களைப் பரீட்சை செய்ய இவ்வாறு சொன்னார்.

பிரஜாபதி சொன்ன மொழிகளைக் கேட்டு அவர்கள், "ஜலத்தில் பார்த்தால் உருவம் காண்கிறோமே, கண்ணாடியிலும் காண்கிறோமே, அது யார்? அவனும் ஆத்மாதானே?" என்று கேட்டார்கள்.

அவர்கள் மனோ நிலையைக் கண்டு, பிரஜாபதி அதிகம் வளர்க்காமல், "ஆம், இவை அனைத்திலும் ஆத்மாவைக் காணலாம்" என்று சொல்லி, "போய்த் தண்ணீர்க் குடத்தில் ஆத்மாவைப் பார்த்து, கண்டதும் காணாததும் வந்து சொல்லுங்கள்" என்றார்.

அவ்வாறே அவர்கள் தண்ணீர்க் குடத்தில் தங்கள் முகத்தை நன்ருகப் பார்த்துவிட்டுச் சந்தோஷமாகத் திரும்பினுர்கள்.

"ஆத்மாவைப் பார்த்தீர்களா ?" என்ருர் குரு.

"ஆம், பார்த்தோம். மயிர், நகம் உள்பட எல்லாம் சரியாகக் கண்டோம்" என்ருர்கள்.

"குளித்து, நல்ல உடுப்பு அணிந்து, மறுபடி தண்ணீர்க் குடத்தில் பார்த்துவிட்டு வாருங்கள்" என்ருர்.

அவர்கள் அவ்வாறே செய்தார்கள்.

"என்ன பார்த்தீர்கள்?" என்று கேட்டார்.

"நாங்கள் இருந்தபடியே, ஆத்மாவும், குளித்து நல்ல உடையும் ஆபரணமும் தரித்திருக்கக் கண்டோம்" என்ருர்கள்.

"சரி! அழிவற்ற பிரமத்தைக் கண்டீர்கள்" என்ருர்.

இதைக் கேட்டுத் திருப்தியடைந்து இருவரும் தத்தம் இருப்பிடம் திரும்பினுர்கள். விரோசனன் மிக்க மகிழ்ச்சியுடன் அசுரர்களுக்குத் தான் கற்றதைப் போதித்தான். 'சரீரமே ஆத்மா; அதற்கே சேவை செய்யுங்கள். பூசிக்கத்தக்கது தேகமே; அதைச் சரியாக உபாசித்தால் எல்லாச் சுகமும் அடைவோம்' என்று அசுரர்களுக்கு உபதேசித்தான்.

அசுரத்தன்மை கொண்டவர்கள், 'தானம், தருமம், பூசை, வேள்வி, இவையேதும் பயனில்லை. உடலைத் தவிர வேறு எதையும் கவனிக்க வேண்டியதில்லை' என்பார்கள்.

விரோசனன் இவ்வாறு செய்தான். இந்திரன் கொஞ்ச தூரம் நடந்ததும் ஐயங் கொண்டான். "இதென்ன? நான் குடத்தில் பார்த்தது சரீரத்தின் பிம்பம்தானே? தேகம் அலங்கரிக்கப்பட்ட போது அலங்கரிக்கப்பட்டவாறும், குளித்தபோது குளித்தவாறும், உடையும் ஆபரணமும் தரித்த போது உடையாபரணம் தரித்தவாறும் இருந்தது இந்தப் பிம்பம். குருடனானால் குருடனாகவும், நொண்டியானால் நொண்டியாகவும், வேறு அங்கம் இழந்தால் அவ்வாறே அதுவும் அங்கஹீனத்துடனும், குடத்தில் கண்ட இந்த பிம்பம் மாறுபட்டுத் தோன்றும். இது, நாம் தேடிய அழிவற்றதும், வேறுபாடற்றதும், பயமற்றதுமான ஆத்மா எவ்வாறு ஆகும்? நான் உண்மையைக் காணவில்லை" என்று தனக்குள் சந்தேகங்கொண்டு திரும்பினான்.

மறுபடி சமித்தும் கையுமாகப் பிரஜாபதியிடம் நின்றான்.

"ஏன் திரும்பினாய்? விரோசனனும் நீயும் திருப்தியடைந்து போனீர்களே?" என்றார் பிரஜாபதி.

"பகவானே! தாங்கள் காண்பித்த ஆத்மா இந்தச் சரீரத்தைப் போலவே, உடை, ஆபரணம்,

நோய், அங்கக் குறைகள், அனைத்தும் கொண்ட தாகவே இருந்தது. இது எனக்குச் சரியாகத் தோன்றவில்லை" என்றான் இந்திரன்.

"நீ சொல்லுவது உண்மை. உனக்கு இன்னும் உபதேசம் செய்வேன். நீ இங்கே தங்குவாயாக" என்றார் பிரஜாபதி.

சில ஆண்டுகளுக்குப் பின் பிரஜாபதி இந்திரனைப் பார்த்து, "அப்பனே ஒருவன் தூங்கும் போது கனவு கண்டு, உடலை விட்டு வெளியேகி, எதேச்சையாக மகிழ்ந்து செல்லுவது நீ அறிவா யல்லவா? அவனே ஆத்மா" என்றார்.

இதைக் கேட்ட இந்திரன், உடலினின்று வேறான ஆத்மாவை அறிந்ததாகத் திருப்தி யடைந்து விடைபெற்றுச் சென்றான். ஆனால், போகும் வழியில் முன்போலவே மறுபடியும் பெரிய சந்தேகம் தோன்றிற்று.

"குருடனாக இருந்தாலும், வேறு அங்கக் குறை களிருந்தாலும், கனவு காணும் ஆத்மா அக்குறைக ளில்லாமலிருப்பது உண்மையே. ஆயினும் கனவு காணும்போது, அடிபட்டும், வெருட்டப்பட்டும், துய ரப்பட்டும், கண்ணீர் விட்டழுதுங்கூட அலைகிறோம். இந்த நிலையானது சோகம் தீண்டாத ஆத்மா எவ்வாறு ஆகும்? இது சரியல்ல. நான் உண்மை யைக் காணவில்லை" என்று பிரஜாபதியிடம் மறுபடியும் வந்து நின்றான்.

"ஏன் திரும்பினாய்?" என்றார்.

"குருவே! சரீரத்தில் கண்ட குறைகள் கனவில் நீங்கியவாறு தோன்றினாலும், நோயும், துயரமும், பயமும், கண்ணீரும் கனவிலும் தொடர்ந்து நிற்கின்றனவே? இது எவ்வாறு ஆத்மா ஆகும்? எனக்குத் திருப்தியாகவில்லை" என்றான்.

"நீ சொல்லுவது உண்மை. இன்னும் சில நாட்கள் இங்கே தங்குவாய், விளக்குவேன்" என்றார்.

இந்திரன் அவ்வாறே காத்திருந்தான். பிறகு ஒருநாள் பிரஜாபதி, "அப்பனே, கனவுகள் இன்றி, நினைவு இன்றி, ஏதும் அறியாமல் தூங்கும் நிலையே ஆத்மா" என்றார்.

இதைக்கேட்ட இந்திரன் "உடலினின்று வேறுபட்ட ஆத்மாவை இப்போது அறிந்துவிட்டேன்" என்று எண்ணி, தேவலோகம் திரும்பிப் போனான். போகும் வழியில் மறுமுறை முன் போலவே ஐயங்கொண்டான்.

"இதென்ன? உணர்ச்சியின்றி, தன்னைத்தான் அறியாத ஒரு பொருள் எவ்வாறு ஆத்மா ஆகும்? இது சுத்த சூனியமாகும். இது சரியல்ல" என்று மறுபடியும் திரும்பினான்.

சமித்தெடுத்துக் குருவின்முன் வணங்கி நின்று, "நான் திருப்தி கொண்டது பிழை. சூனியத்தை ஆத்மாவாகக் கொண்டேன். தன்னைத்தான் அறியாதது எவ்வாறு ஆத்மா ஆகும்?" என்றான்.

"நீ சொல்லுவது உண்மை. இன்னொரு முறை முடிவாக உபதேசம் பெறுவாய். இன்னும் ஐந்து ஆண்டுகள் இவ்விடம் இருப்பாயாக" என்றார். அவ்வாறே இருந்து உபதேசம் பெற்றான். ஆக இந்திரன் பிரஜாபதியிடம் நூற்றொரு ஆண்டுகள் சீடனாக விரதம் பூண்டு காத்து உபதேசம் பெற்றதாக வேதத்தில் சொல்லப்படுகிறது.

இந்தத் தேகம் அழியும் பொருள். மரணத்தில் அகப்பட்டுக் கிடக்கும் வஸ்து. மரணமற்றதும் சரீரமற்றதுமான ஆத்மா, தேகத்தில் மறைந்து வசிக்கிறது. அது தேகத்தினுள் வசிக்கும்போது, தானே தேகமாகவும், தேகமே தானாகவும் மயங்கி, தேகத்தின் இன்பதுன்பங்களுள் கட்டுண்டு கிடக்கின்றது. தேகத்தினுள் இருக்கும் வரையில் இந்தப்படி கட்டுண்டுதானிருக்கும். சரீரத்தை விட்டு அகன்ற பின் அது விடுதலை யடையும். சூரியனைக்கண்ட ஜலம் அருவமாகி, (உருவமற்றதாகி) மேல்நோக்கிச் செல்லுவதுபோல், பரஞ்சோதியின் ஒளிபட்டதும் இந்த ஆத்மாவும் கிளம்பிப் பரஞ்சோதியுடன் கலந்து ஆனந்த நிலையை அடையும்.

வண்டியில் கட்டிய குதிரையைப்போல் ஆத்மா சரீரத்தில் கட்டப்பட்டு நிற்கிறது. காண்பது கண் அல்ல; கண்ணைக் கருவியாகக்கொண்டு காண்பது ஆத்மா. பேசுவது நாக்கு அல்ல; நாக்கைக் கருவியாகக்கொண்டு பேசுவது ஆத்மா. காதைக்கொண்டு இதைக் கேட்பேன் என்பது ஆத்மா. மனதும்

ஆத்மா அல்ல; இதை எண்ணுவேன் என்று மனதைக்கொண்டு எண்ணுபவனும் மனதை அடக்குபவனும் ஆத்மா. மனதையே கண்ணுகக்கொண்டு தியானத்தில் மூழ்கிப் பரமாத்மாவைக் கண்டு ஆனந்தம் கொள்ளுபவன் ஆத்மா.

இவ்வாறு உடலினின்றும் இந்திரியங்களினின்றும் உடலின் செயல்களினின்றும் மனதினின்றும் வேருன பொருளே ஆத்மா; அது தன்னில் தானே பரமானந்தம் அடையும். சரீரம் வேறு, அது வேறு.

குடத்திலும் கண்ணுடியிலும் கண்ட பிம்பமே ஆத்மா என்று இந்திரன் முதலில் நினைத்தது பெரிய அறிவீனம் என்று நாம் எளிதில் காண்கிறோம். ஆயினும், மிகுந்த அறிவும், கல்வி கேள்விகளும் பெற்றவர்களே யாயினும், உண்மையில் உடலின் உணர்ச்சிகளையே ஆத்மாவாகக் கொண்டு கலவரப் படுத்திக்கொள்கிறோம். உடலின் உணர்ச்சிகளை வேறுபடுத்தி, ஆத்மா என்ற தனிப்பொருளைச் சிந்தித்துக் காண்பதும், கண்டாலும் அதை மனதில் நிறுத்துவதும் கடினமேயாகும். ஆழ்ந்து பார்ப்பின், நீர்க்குடத்தில் காணும் பிம்பத்தைத்தான் நாம் அனைவரும் ஆத்மாவாகக் கருதி வாழ்கிறோம். விளக்கிச் சொல்லும்போது பிழையை எளிதில் காண்கிறோம். ஆனல், அடுத்த நிமிஷத்தில், செயலில் மறுபடி பழைய பிழையிலேயே நிற்கிறோம்.

17

வில் வளைத்த தியானம்

அநேக ஆயிர வருஷங்களுக்கு முன்னமேயே முண்டக உபநிஷத்தில் அங்கிரஸ முனிவர் சௌனகருக்கு சாத்திரம் ஓதல் போதாது என்று உபதேசிக்கிறார்.

கற்க வேண்டிய கல்வி இருவகையாகும். கீழ்ப் பகுதி ஒன்று; மற்றொன்று பேரறிவு. ஸ்வரம், வியாகரணம், சந்தம், பதவுரை, இவையடங்க, சகல வேதங்களையும் நன்றாகக் கற்றுவிட்ட போதிலும் அது கீழ்ப்பகுதி அறிவேயாகும். அழிவற்ற பரம் பொருளைப்பற்றிய அறிவே பேரறிவு. கிரியைகளி னால் நித்தியமான பரம்பொருளை அடையமுடியாது. அறிவும் ஒழுக்கமும் கொண்ட ஆசாரியனை அடைந்து ஆத்ம தரிசனம் தரக்கூடிய பேரறிவைத் தேடுவாயாக.

படிப்பினாலாவது மதி நுட்பத்தினாலாவது அந் தராத்மாவின் தரிசனம் ஒருவன் பெறமுடியாது. எவ் வளவு வேதம் ஓதினாலும், எவ்வளவு புத்திகூர்மை யும் அறிவும் படைத்தாலும், எவ்வளவு கல்வி கேள் விகள் அடையப் பெற்றாலும், உள்ளத்தில் மறைந்து

நிற்கும் சர்வபூதாந்தராத்மா தானே விரும்பினலொழிய அவன் சொரூபம் தோற்றமாகாது. உள்ளத்தினின்று பொங்கும் விருப்பம் வேறு, படிப்பும் மதி நுட்பமும் வேறு. இதயத்தினுள் வசிக்கும் ஈசுவரன் அருளிருப்பின் இந்த விருப்பம் பொங்கிக் காட்சி அடைவோம்.

பலஹீனம் ஆத்ம தரிசனத்திற்குத் தடையாகும். அறிவும் வேண்டும், பலமும் வேண்டும் என்று உபநிஷத்துச் சொல்லுகிறது. இவ்விடத்தில் 'பலம்' என்றால் சோர்வற்ற முயற்சியைக் குறிக்கும்; அதாவது, புலன்களையும் மனதையும் வசப்படுத்தி ஆசைப் பற்றுக்களை யொழிக்கும் முயற்சி. கண்ணும் கருத்துமாகத் தைரியமும், அப்பியாசமும் கைக்கொண்டு புலன்களை யடக்கிப் பற்றுக்களை ஒழிக்கவேண்டும் என்பது உபதேசத்தின் பொருள்.

குறியற்ற தவத்தால் இதயத்தில் மறைந்து நிற்கும் பரமாத்மாவைக் காணமுடியாது. உடலை வருத்துவதனலேயே பயனென்றுமில்லை. சரியான முறையில் அறிவும் பக்தியும் கொண்டு மனதை அடக்கி ஆசைத் தளைகளை நீக்குவதே பயன் தரக்கூடிய தவமாகும்.

தியானத்திற்கு முண்டக உபநிஷத்தில் ஒரு சிறந்த உவமை சொல்லப்பட்டிருக்கிறது. தியானம் செய்கிறவன் வில்லாளி. குருவிடத்தில் அடைந்த

வேதாந்த ஞானமே வில். தியானம் செய்பவனு டைய ஆத்மாவே அம்பு. அம்பாகிய ஆத்மாவை, அதாவது தன் உள்ளத்தை, வில்லில் வைத்து நாணை இழுக்க வேண்டும். நாணை இழுப்பது என்றால் ஏகாக்கிர சித்தத்துடன் தான் அடைந்த ஞானத்தை உபயோகித்துத் தியானிப்பது. நாணை நன்றாக இழுத்துக் குறி பார்க்கவேண்டும். பரமாத் மாவே குறியாகும். நல்ல வில்லாளன் வில்லை வளைக் கும்போது குறியும் அம்பும் ஒரு நேரில் அமையச் செய்கிறான். அந்த நிலையில் அம்பு குறியில் மறைந்து போகிறது. பரம்பொருளைத் தியானம் செய்பவன், அவ்வாறே தன் ஆத்மாவையும் பரமாத்மாவையும் ஒன்றாகவே காணவேண்டும். தியானம் செய்யும் காலத்தில், பரமாத்மாவில் தன் ஆத்மா முற்றிலும் அத்துவிதீயமாக மறைந்து போகவேண்டும்.

வில்லை வளைத்து அம்பை விடும் தறுவாயில், நல்ல வில்லாளன் குறியைத் தவிர வேறு எதையும் காணமாட்டான். அவன் கண்ணுக்கு வில், அம்பு, உலகம் அனைத்தும் அந்தச் சமயம் மறைந்து போகும். தன் உடலையும் மறந்துவிடுவான். குறி ஒன்றே அவன் கண்ணில் நிற்கும். அதுபோல், ஏகாக்கிர சித்தத்துடன் தியானம் செய்பவனுக்குப் பரமாத்மாவைத் தவிர மற்ற அனைத்தும் மறைந்து போய், தன் உள்ளமும் அந்தப் பரமாத்மாவில் மறைந்து அத்துவிதீயமாகிவிடும். அத்தகைய தியானத்தினால், அவன் உள்ளம் நல்ல வில்லாளன்

ஏந்திய அம்பைப்போல் பாய்ந்து குறியைச் சேரும், அதாவது பரமாத்மாவைத் தரிசிப்பான்.

'யுத்தத்திலும் மிருக வேட்டையிலும் எய்யும் அம்பைக் கூராகத் தீட்டி வைத்துக்கொள்வார்கள். அதைப்போல் உள்ளமாகிய அம்பையும் பக்தியி ஞல் நன்ருகத் தீட்டிக் கூராக வில்லில் வைப்பா யாக' என்கிருர் முனிவர். அவ்வாறு தீட்டினல்தான் உள்ளமாகிய அம்பு ஈசுவரனுகிய குறியை அடைந்து நன்ருகப் பதிந்து பற்றிக்கொள்ளும் என்றவாறு.

———

18

எங்கும் மறைந்துள்ள பொருள்

“ குழந்தாய்! பதினைந்து நாள் ஆகாரம் இல்லாமல் இரு. தண்ணீர் மட்டும் வேண்டிய அளவு அருந்து ” என்றார் உத்தாலகர்.

அவ்வாறே **சுவேதகேது** பதினைந்து நாட்கள் உபவாசம் இருந்தான். பிறகு தகப்பனார் அவனைப் பார்த்து, “அப்பனே ! நீ கற்றதைச் சொல்” என்றார். கற்றது எதுவும் சரியாக நினைவுக்கு வராமல் சுவேதகேது மயங்கினான்.

“ஒரு பெரிய நெருப்பு அணைந்துபோய் சிறு மின்மினிப் பூச்சியைப் போன்ற பொறியொன்று மட்டும் இருந்தால், அது எதையும் எரிக்க முடியாது. அதைப்போல், உன்னுடைய உயிரில் உபவாசத்தின் பயனாகப் பதினாறில் ஒரு பங்கு மட்டுமே நின்றிருக்கிறது. அதைக்கொண்டு நீ கற்றறிந்த வேதங்களை நினைவுக்குக் கொண்டுவர முடியவில்லை. போய் அன்னம் புசித்து வா !” என்றார்.

சுவேதகேது சிறிதளவு அன்னம் உட்கொண்டு தகப்பனாரிடம் திரும்பி வந்தான்.

எல்லாம் மறுபடி ஞாபகம் வந்துவிட்டது. கேட்டதைச் சொல்லுகிறேன்'' என்றான்.

“பெரியதீயில் ஒரே ஒரு சிறு பொறி மிஞ்சியிருந்தாலும் அதன்மேல் சரகு போட்டவுடன் மறுபடி நெருப்பானது கொழுந்துவிட் டெரிகிறது. பிறகு அது எல்லாவற்றையும் தகித்துவிடக்கூடும். அவ்வாறே, அன்னமின்றி நீர்மட்டும் அருந்தி, வீசம் பங்கு பிராணன் மட்டும் உன் தேகத்தில் நின்றிருந்தது; அதற்கு அன்னம் இட்டவுடன், சரகைக் கொண்ட சிறு தீப்பொறி ஜுவாலையுடன் கிளம்புவதுபோல், நீ முன் கற்ற வேதங்கள் முழுதும் நினைவுக்கு வந்துவிட்டது. தண்ணீர் பிராணன் ஆவதையும், அன்னம் மனம் ஆவதையும் நீ அறிந்தாயா?'' என்றார் உத்தாலகர்.

நீரின் தன்மையும் உயிரின் தன்மையும் வேறாகத் தோன்றுகின்றன. அன்னத்தின் தன்மையும் மனதின் தன்மையும் வேறாகக் காணப்படுகின்றன. ஆயினும் உடலில் சேர்ந்ததும் நீர் உயிராகவும், அன்னம் மனமாகவும் மாறுவதை உத்தாலகர் மகனுக்குக் காட்டினர். எப்பொருளிலும் பராசக்தி சூட்சும உருவமாக மறைந்து நிற்கிறது. நீரிலுள்ள சூட்சுமப் பொருள் உயிராகவும் அன்னத்திலுள்ள சூட்சுமப்பொருள் மனிதனுடைய நுண்ணிய மனப்பொருளாகவும் மாறுகின்றன. பரம்பொருளின் சர்வவியாபகத்தை இதனல் உணர்ந்துகொள்ளலாம்.

பாலில் வெண்ணெய் இருப்பதுபோல் மனிதன் உள்ளத்தில் அந்தராத்மா மறைந்து நிற்கிறான். பாலைத் தயிராக்கி அதைக் கடைந்து வெண்ணெய் எடுப்பதுபோல் உள்ளத்தைப் பக்குவப்படுத்தி அதனுள் மறைந்திருக்கும் ஆத்மாவைக் கடைந்து திரட்டி எடுக்கவேண்டும்.

வெள்ளம் ஓடாத ஆற்று மணலுக்குள் தண்ணீர் மறைந்து நிற்கிறது. தோண்டினால் ஊற்று உண்டாகும். அவ்வாறே உள்ளத்தில் மறைந்து நிற்கும் ஈசுவரனையும் அடையலாம்.

அரணியிலிருந்து நெருப்பு உண்டாக்குவது போலும், பாலிலிருந்து வெண்ணெய் கடைந்து திரட்டி யெடுப்பதுபோலும், ஆற்று மணலில் ஊற்றுத்தோண்டித் தண்ணீர் மொண்டுகொள்வது போலும், தவத்தினால், அதாவது மனதையும் புலனையும் அடக்கித் தியானம் செய்து, உள்ளத்திலே மறைந்து கிடக்கும் பரமாத்மாவைத் தரிசித்துக் கொள்ளுங்கள் என்று சுவேதாசுவதர உபநிஷத்து சொல்லுகிறது.

19

க்ஷேத்திர நாலுக்கு அடங்காது

உபநிஷத்துகளைச் சிறுவர்களுக்கு அறிமுகப் படுத்த வேண்டி இந்த நூல் எழுதினேன். அந்த நோக்கம் பூர்த்தியாக, முதல் நூலிலிருந்து சில மந் திரங்களை எடுத்து இனிவரும் அத்தியாயங்களில் சொல்லுவேன். உரையைக்கொண்டு மந்திரங்களைப் படித்தால் வடமொழிப் பயிற்சியும் ஒருவாறு சிறுவர்கள் இதனால் அடையக்கூடும்.

தேகத்துக்கு ஜீவாத்மா எப்படியோ அப்படி ஜீவாத்மாவுக்குப் பரமாத்மா. தேகத்தை, அதாவது சேதனமற்ற ஒரு சவத்தை, எப்படி ஜீவன் உயிரும் சேதனமும் கொண்ட பொருளாக்கி அதற்குள் அந்தர்பாவமாய் இருந்து வருகிறதோ, அம்மாதிரி ஜீவனுக்குள் பரமாத்மா அந்தர்பாவமாய் நின்று அந்த ஜீவனைத் தாங்கிப் பிரகாசித்து வருகிறான் என்று சொல்லலாம்.

ஜீவன் எப்படிப் பல ஜன்மங்களில் பலவேறு வடிவங்கள் தரித்துவருகிறதோ, அவ்வாறு பரமாத்மா ஒரே காலத்தில் பல ஜீவன்களாக நிற்கிறான். எந்த வஸ்துக்குள்ளும் எந்தத் தேகத்துக்குள்ளும் பரம்பொருள் நின்று அதைத் தாங்கி வருகிறது.

ஆனால் ஈசன் தனிப்பட்டும் நிற்கிறான். பரம்பொருளைத் துண்டுகளாக்க முடியாது. பல பொருள்களில் நின்றாலும் அதன் ஒருமை சிதறிப் போகாது.

ममेवांशो जीवलोके जीवभूतस्सनातनः ।
मनःषष्टानीन्द्रियाणि प्रकृतिस्थानि कर्षति ॥

மம ஏவ அம்ச: ஜீவலோகே ஜீவபூத: ஸநாதன: |
மன:ஷஷ்டானி இந்த்ரியாணி ப்ரக்ருதிஸ்தானி
கர்ஷதி ||

என்று கீதையில் பகவான் சொல்லுகிறார்.

அதாவது:

"எனதொரு கிரணமே ஜீவலோகத்தில் சென்று அங்கே அழியா ஜீவனாகி, ஐந்து இந்திரியங்களையும்,ஆறாவதாக மனதையும் சேர்த்துக்கொண்டு நிற்கிறது."

ஈசாவாஸ்ய உபநிஷத சாந்தி சுலோகமும் இதையே சொல்கிறது.

ॐ पूर्णमदः पूर्णमिदं पूर्णात्पूर्णमुदच्यते ।
पूर्णस्य पूर्णमादाय पूर्णमेवावशिष्यते ॥
ॐ शान्तिः शान्तिः शान्तिः ॥

ஓம் பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ண
முதச்யதே
பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவ
அவசிஷ்யதே |

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

அதாவது:

"அதுவும் பூரணம்; இதுவும் பூரணம். பூரணத்திலிருந்து பூரணம் வெளிவந்தது; ஆயினும் பூரணம் குறைவுபடவில்லை. மிஞ்சி நிற்பதுவும் பூரணமே."

க்ஷேத்திரகணித ஆதார நியதிக்கு இது விரோதமாகும். ஒரு பொருளினின்று ஒரு பகுதியை வேறுபடுத்தினால், மிஞ்சி நிற்பது முழுமையிழந்து, ஒரு பகுதியாகத்தான் நிற்கும் என்று க்ஷேத்திர கணிதத்தின் சித்தாந்தம். ஆனால் பரம்பொருள் இந்த க்ஷேத்திர நூல் நியதிக்கு அடங்காது. பகுதிகள் வேறுபட்ட போதிலும், முதற்பொருள் முழுமைகொண்டே இருக்கும்; வேற்றுமையும் ஒற்றுமையும் கலந்து நிற்பதே பரம்பொருளின் தன்மை.

முனிவர் உபநிஷத்தை உபதேசிக்குமுன் சீடனை முழுமுதற்பொருளையும் தன் ஆத்மாவையும் சேர்த்துத் தியானிக்கச் செய்கிறார். 'உலகத்தை ஈன்ற ஈசுவரனும், அவனின்று பொறிந்த என் ஆத்மாவும், இரண்டும் முழுப்பொருள்கள். முழுப் பொருளினின்று உண்டாகிய பகுதியும், முழுப் பொருளே. முதற்பொருளும், முன்போலவே, தன் முழுமைக்குக் குறைவு இல்லாமல் நிற்கிறது. அந்த முதற்பொருள் எனக்குச் சாந்தி தருக.'

முண்டக உபநிஷத்தில், பரம்பொருளுக்கும் ஜீவாத்மாவுக்கும் உள்ள ஒருமையைச் சொல்லும் போது முனிவர் விளக்குகிறார்:—

तदेतत्सत्य

यथा सुदीप्तात्पावकाद्विस्फुलिङ्गाः
सहस्रशः प्रभवन्ते सरूपाः ।
तथाक्षराद्विविधाः सोम्य! भावाः
प्रजायन्ते तत्र चैवापियन्ति ॥

தத் ஏதத் ஸத்யம் யதா ஸுதீப்தாத் பாவகாத் விஸ்புலிங்கா: ஸஹஸ்ரச: ப்ரபவந்தே ஸரூபா:|

ததா அக்ஷராத் விவிதா: ஸோம்ய! பாவா: ப்ரஜாயந்தே தத்ர ச ஏவ அபியந்தி||

உண்மையைக் கேள், குழந்தாய்! ஜுவாலை விட்டு எரியும் பெருந்தீயிலிருந்து நான்கு பக்கமும் பொறிகள் பறந்து செல்வதுபோல் பரம்பொருளினின்று பல கோடி ஜீவன்கள் உண்டாகி உண்டாகி மறுபடி அதனுடன் சேர்ந்து ஒன்றுகின்றன.

இவ்வாறு தன் ஆத்மாவின் தூய்மையையும், அது ஈசுவரனோடும் உலகத்தோடும் ஒன்றுபட்டு நிற்கும் பண்பையும் அடிக்கடி தியானித்து வந்தால், பலஹீனம் போய்ச் சக்தி பிறக்கும்; தீய எண்ணங்கள் போய் நல்லெண்ணங்களுண்டாகும். துக்கங்கள் பனிபோல் கரைந்துபோகும். மனப் பிரசாதம் பெறுவோம்.

20

கீதையும் உபநிஷதமும்

கடோபநிஷத்தில் சிநேகிதனுக்கு யமன் சொல்லு கிறான்: "குழந்தாய்! நன்மை வேறு, இனிமை வேறு. இவை யிரண்டும் மனிதனுடைய உள்ளத் தைப் பற்றுகின்றன. புத்திமான் நன்மையை உயர்ந்ததாகக் கருதுவான். மூடன், இன்பம் தருவ தைப் பெரிதாகக் கருதி ஏமாற்றம் அடைவான். நல்லதும் இனியதும் தன்முன் நிற்கும்போது தீரன் இரண்டையும் நன்றாகச் சூழ்ந்து பார்த்து, நன்மையைத்தான் நாடுவான். மூடனோ, நன்மை யைப் புறக்கணித்து இனியதைப் பற்றிக்கொள்ளு வான்.

"ஞானத்திற்கும் ஞானம் தராத கல்விப்பயிற் சிக்கும் வெகுதூரம். கற்றதெல்லாம் அறிவாகாது. கற்றறி மூடர்கள் தாங்கள் அடைந்த கல்வியைப் பெரிதாகக் கருதி, கண்ணில்லாதவன் வழிகாட்டு வதை நம்பிச் செல்லும் குருடர்களைப்போல் சுற்றிச் சுற்றித் தடுமாறி அலைவார்கள்.

"வேதாந்தம் படித்து அறிந்ததனாலேயே பர மாத்மாவின் தரிசனம் கிடைத்துவிடாது. சுத்த மான உள்ளமும், விஷய சுகங்களைப் பொருட்படுத்

தாத பயிற்சியும் இல்லாவிடில், அறிவு முழுதும் பயனற்றதாகும். தீய ஒழுக்கத்தினின்று விலகாத வன், புலன்களையும் மனதையும் தன் வசப்படுத்திக் கொள்ளாதவன், உள்ளத்தில் சாந்த சமநிலை யடை யாதவன், அறிவினால் மட்டும் பரம்பொருளைக் காணமுடியாது.

"ஞானமின்றிக் கிரியைகளையும் சடங்குகளையும் கைக்கொள்கிறவர்கள் காரிருளில் கிடக்கிறார்கள். ஆனால் செய்யவேண்டிய கருமங்களைப் புறக்க ணித்து, வேதாந்த ஆராய்ச்சிகளிலேயே மகிழ்ச்சி யடைந்து திருப்தி கொள்கிறவர்களும் அதைவிடப் பெரிய அந்தகாரத்தில் மூழ்குவார்கள்" என்று ஈசாவாஸ்ய உபநிஷத்து சொல்லுகிறது.

ஞானம் அடைந்தவனும் சாதாரண ஜனங் களைப்போலவே செயல்களைச் சரிவரச் செய்து வாழ் நாளை முடிக்க வேண்டும். அவ்வாறு முடித்துவிட்டு உடலை நீத்தபின், ஞானத்தின் பயனாக அமிருதத்து வத்தையும் அடையலாம்.

ஆசைகளை எரிப்பதே வேள்வி. பற்றுக்களை விடுவதே துறவு. துறவு மார்க்கம் ஒன்றே மோக்ஷ சாதனம் என்ற அபிப்பிராயத்தைக் கண்டித்து, வாழ்க்கைக்கு வேண்டிய காரியங்களை நடத்தியே தருமத்தில் நிற்கலாம் என்ற உண்மையைப் பகவான் அருச்சுனனுக்குக் கீதையில் விளக்கி யிருக்கிறார். சமுதாய க்ஷேமத்திற்கு வேண்டிய

காரியங்கள் நடைபெற வேண்டுமென்றும், அந்தக் காரியங்களில் அவனவன் தனக்கு ஏற்பட்ட கடமைகளைச் சரிவரச்செய்து முடிப்பதால் மோக்ஷத்திற்குத் தடை ஏற்படாதென்றும் கீதை உபதேசிக்கிறது. சுயநலப் பற்றின்றி, வெற்றி தோல்விகளைக் கண்டு மனங்கலங்காமல், உள்ளத்தில் அமைதியோடு எல்லாக் காரியங்களையும் பகவானுக்கு அர்ப்பணமாகவே செய்துவந்தால், அதுவே வேள்வியும், அதுவே சந்நியாசமும் ஆகும் என்று கீதையில் மிக விளக்கமாகப் பகவான் காட்டியிருக்கிறார்.

இதைச் சுருக்கமாக ஈசாவாஸ்ய உபநிஷத்தில் முதல் இரண்டு மந்திரங்களில் முனிவர் பாடியிருக்கிறார்.

ईशावास्यमिदं सर्वं यत्किंच जगत्यां जगत् ।
तेन त्यक्तेन भुञ्जीथा मा गृधः कस्यस्विद्धनम् ॥
कुर्वन्नेवेह कर्माणि जिजीविषेच्छतं समाः ।
एवं त्वयि नान्यथेतोऽस्ति न कर्म लिप्यते नरे ॥

ஈசாவாஸ்யம் இதம் ஸர்வம் யத் கிஞ்ச
ஜகத்யாம் ஜகத் |
தேந த்யக்தேந புஞ்ஜீதா மாக்ருத:
கஸ்யஸ்வித் தனம் ||
குர்வன் ஏவ இஹ கர்மாணி
ஜிஜீவிஷேச்சதம் ஸமா :|
ஏவம் த்வயி ந அந்யதா இத: அஸ்தி
ந கர்ம லிப்யதே நரே ||

அதாவது:

"உலகத்தில் உள்ள அனைத்தும் ஈசனுக்குள் அடங்கியதாகும். அவனை விட்டகன்றது எதுவு மில்லை.

"பொருட் பற்றைவிட்டு நலன்கள் பெறுவா யாக. எவனுடைய பொருளின் மேலும் ஆசை கொள்ளாதே.

"அவ்வாறு எல்லாம் ஈசன்மயம் என்றறிந்து, செய்யும் கருமங்களெல்லாம் அவனுக்கே அர்ப்ப ணம் என்று செய்துவந்து, உனக்கிட்ட வாழ் நாட்களை முடிப்பாயாக.

"கருமத் தளையில் சிக்கிக் கொள்ளாமல் வாழ் நாளை முடிப்பதற்கு இதுவே வழி. வேறு கிடை யாது."

ஆகையால் உபநிஷத வாக்கியமும் கீதா உப தேசமும் ஒன்றே. ஆசைகளை ஒழித்து, எல்லாம் ஈசன்மயம் என்று அறிந்து, அவனுக்கு அர்ப்பண மாகவே எல்லாத் தொழில்களையும் செய்து, வாழ் நாட்களை முடிக்கவேண்டும். ஆசைகளை ஒழிப்பது வேள்வி. அறிவே ஆசைகளை எரித்துவிடும் வேள்வி நெருப்பு.

यथैधांसि समिद्धोऽग्निः भस्मसात्कुरुतेऽर्जुन ।
ज्ञानाग्निः सर्वकर्माणि भस्मसात्कुरुते तथा ॥

யதா ஏதாம்ஸி ஸமித்த: அக்நி:
பஸ்மஸாத் குருதே அர்ஜுந ।
ஞானக்நி: ஸர்வகர்மாணி பஸ்மஸாத்
குருதே ததா ॥

அதாவது:

“ நன்கு கொளுத்துண்ட தீயானது விறகுத் துண்டுகளைச் சாம்பராக்கி விடுவதுபோல், ஞானத் தீயானது எல்லாக் கருமங்களையும் சுட்டுச் சாம்பலாக்கிவிடும் ” என்று கீதையில் பகவான் அருச்சுனனுக்கு உபதேசிக்கிறார்.

இதுவே மேலே சொல்லப்பட்ட ஈசாவாஸ்ய உபநிஷத மந்திரங்களின் பொருள். அனைத்தும் ஈசன்என்ற ஞானத்தை முதல்பாகத்திலும், பற்றுக் களையும் ஆசைகளையும் மனதினின்று ஒழித்துக் கருமங்களைச் செய்யும் மார்க்கத்தை இரண்டாவது பாகத்திலும் முனிவர் சொல்லுகிறார். இவ்வாறு ஞானம் பெற்று, ஆசைகளை ஒழித்து, கருமங்களைப் பகவானுக்கு அர்ப்பணமாகச் செய்வதே கரும பாசத்தினின்று விலகும் வழி, வேறில்லை என்பதே கீதை, உபநிஷதங்கள் இரண்டின் உபதேசமும். இந்த உபதேசத்தை அனுசரித்து நடப்பதற்குப் பெரும் சாதகமும், பக்தியும், தெய்வ உபாசனமும் வேண்டும். இதுவே ஹிந்து மதத்தின் முழு வடிவம்.

21

நதிகளனைத்தும் கடலில் சேர்ந்துவிடும்

தான் என்றும் மற்றவர்கள் என்றுமுள்ள வேற்றுமை உணர்ச்சி ஒழிந்து எல்லா உயிரும் பரமாத்மாவின் அம்ச விகாரங்கள் என்ற மனோ பாவத்தை அடையவேண்டும் என்று கீதையில் பகவான் உபதேசிக்கிறார். ஆத்மாவை அஞ்ஞானமானது சூழ்ந்துகொண்டு ஞான ஒளியை மறைக்கிறது. அந்த அஞ்ஞானத்தை ஞானத்தால் ஒழித்தவர்களுடைய அறிவு சூரியனைப் போல் பிரகாசிக்கும். அவர்களுடைய கண்ணுக்கு, கல்வியும் சிக்ஷையும் பெற்ற ஒரு பிராமணனும், யாதும் கற்காத ஒரு பிராகிருதனும், ஒன்றாகவே தோன்றுவர். மனிதர்களில் மேலோன், கீழோன் என்கிற உணர்ச்சி அற்றுப் போகும். பிரிவுபட்டு நிற்கும் எல்லா உயிர்களிலும், பிரிவற்றதும் நாசமற்றதுமான ஒரே பரம்பொருளைக் காண்பார்கள்.

இவ்வாறு கீதை ஐந்தாவது ஆறாவது அத்தியாயங்களில் சொல்லப்பட்டு, பதினெட்டாவது அத்தியாயத்தில் ஊர்ஜிதப்படுத்தப் பட்டுள்ள உண்மையை அதற்கும் முந்தி ஈசாவாஸ்ய உபநிஷத்தில் முனிவர் விளக்கியிருக்கிறார்:

यस्तु सर्वाणि भूतान्यात्मन्येवानुपश्यति ।
सर्वभूतेषु चात्मानं ततो न विजुगुप्सते ॥
यस्मिन्सर्वाणि भूतान्यात्मैवाभूद्विजानतः ।
तत्र को मोहः कः शोक एकत्वमनुपश्यतः ॥

யஸ்து ஸர்வாணி பூதானி
ஆத்மனி ஏவ அனுபச்யதி ।
ஸர்வபூதேஷு ச ஆத்மானம்
ததோ ந விஜுகுப்ஸதே ॥
யஸ்மின் ஸர்வாணி பூதானி
ஆத்மாஏவ அபூத்விஜாநத: ।
தத்ர கோ மோஹ: க: சோக:
ஏகத்வம் அனுபச்யத: ॥

அதாவது:

"எல்லாப் பொருள்களும் ஈசனுக்குள் தங்கியிருப்பதையும், எல்லாப் பொருள்களிலும் ஈசன் இருப்பதையும், அந்த ஈசன் தன் அந்தராத்மாவாக இருப்பதையும் ஒருவன் கண்டானுனல், அவன் மனதில் வெறுப்பு என்பது பிறகு இருக்க இடமில்லை.

"அனைத்தும் ஈசனே என்றும், அனைத்தும் ஒன்றே என்றும் ஒருவன் கண்டுவிட்டால், பிறகு மோகம் எங்கே, துக்கம் எங்கே? அவனைத் துயரம் வருத்தாது, மயக்கம் அணுகாது."

கடோபநிஷத்தில் சொல்லப்படுகிறது:

यदेवेह तदमुत्र यदमुत्र तदन्विह ।
मृत्योः स मृत्युमाप्नोति य इह नानेव पश्यति ॥
मनसैवेदमाप्तव्यं नेह नानास्ति किंचन ।
मृत्योः स मृत्यं गच्छति य इह नानेव पश्यति ॥

யத் ஏவ இஹ தத்அமுத்ர யத்
அமுத்ர தத் அனுஇஹ ।
ம்ருத்யோ : ஸ ம்ருத்யும் ஆப்நோதி
ய இஹ நாநாஇவ பஶ்யதி ॥
மனஸா ஏவ இதம் ஆப்தவ்யம்
ந இஹ நாநாஅஸ்தி கிஞ்ச்சந ।
ம்ருத்யோ : ஸ ம்ருத்யும் கச்சதி
ய இஹ நாநாஇவ பச்யதி ॥

அதாவது :

"இங்கிருப்பதே அங்கும்; அங்கிருப்பதே இங்கும்; வேற்றுமை காண்பவன் பிறப்பும் இறப்பும் அடைந்து கொண்டிருப்பான். வேற்றுமை உணர்ச்சியை முற்றிலும் மனதிலிருந்து அகற்றிவிட வேண்டும். வேற்றுமையைக் காண்பவன் பிறவிச் சுழலிலிருந்து மீளமாட்டான்."

அதே உபநிஷத்தில் இன்னும் சொல்லப்படுகிறது:

एको वशी सर्वभूतान्तरात्मा एकं रूपं बहुधा यः करोति ।
तमात्मस्थं येऽनुपश्यन्ति धीरास्तेषां सुखं शाश्वतं नेतरेषाम् ॥

ஏகோ வசீ ஸர்வபூதாந்தராத்மா ஏகம் ரூபம்
பஹுதா ய: கரோதி ।
தம் ஆத்மஸ்தம் யே அனுபச்யந்தி தீரா :
தேஷாம் ஸுகம் சாச்வதம் ந இதரேஷாம் ॥

அதாவது:

"தனி ஒருவனும் ஈசனுமான பரமாத்மா எல்லா உயிர்களுக்குள்ளும் நின்று, ஒரு வடிவத்தைப் பல வடிவங்களாகச் செய்கிறான். இவ்வாறு அந்தராத்மாவைத் தமக்குள் காணும் ஞானிகள் நித்தியமான இன்பத்தை எய்துவார்கள். ஒருமையைக் காணாதவர்களுக்கு இன்பம் இல்லை."

முண்டக உபநிஷத்தில் முனிவர் உபதேசிக்கும் மந்திரம் ஒன்று:—

यथा नद्यः स्यन्दमानाः समुद्रेऽस्तं गच्छन्ति नामरूपे विहाय ।
तथा विद्वान्नामरूपाद्विमुक्तः परात्परं पुरुषमुपैति दिव्यम् ॥

யதா நத்ய: ஸ்யந்தமாநா: ஸமுத்ரே அஸ்தம்
கச்சந்த்தி நாமரூபே விஹாய ।
ததா வித்வாந் நாமரூபாத் விமுக்த: பராத்பரம்
புருஷம் உபைதி திவ்யம் ॥

அதாவது:

ஓடும் பல நதிகள் கடலில் சேர்ந்து தம் வேற்றுமைகள் நீங்கி, அதாவது கங்கை, ஸிந்து, காவேரி, நருமதை என்ற பெயர்களும் வேற்றுமைகளும் நீங்கி, ஒன்றாகி விடுவதுபோல், ஞானிகள், வெவ்

வேறு பெயரும் உருவமும் கொண்ட பொருள்களின் ஒருமையைக் கண்டு, வேற்றுமை யுணர்ச்சியை அகற்றி, ஒளிரும் பரம்பொருளை அடைவார்கள். நதிகள் கடலைச் சேருவதுபோல், ஞானிகளின் அறிவுக்கடலில் எல்லாப் பொருள்களும் வேற்றுமை யொழிந்து ஒருமைப்படுகின்றன. ஞான ஒளி பெற்றுப் பரம்பொருளைக் கண்டதும் ஆத்மா முக்தி யடைகிறது. காண்பது வேறு, அடைவது வேறு அல்ல. அடைவதற்குக் காணுததே தடையா யிருப்பதால், கண்டதும் அந்தத் தடை நீங்கிப் பரமாத்வை அடையலாம். ஆகையால் ஈசனைக் காண்பதும் அடைவதும் ஒன்றே.

22

அறிவுக்கு எட்டாத பொருள்

न तत्र चक्षुर्गच्छति न वाग्गच्छति ।

ந தத்ர சக்ஷுː கச்சதி ந வாக் கச்சதி ||

பரமாத்மாவின் இலட்சணங்களைச் சொல்ல முடியாது. அது கண்ணால் காணக் கூடியதல்ல; மொழிகளால் விளக்கக்கூடியதல்ல.

यद्वाचानभ्युदितं येन वागभ्युद्यते ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते ॥

யத் வாசா அனப்யுதிதம்
யேந வாக் அப்யுத்யதே |
தத் ஏவ ப்ரம்ம த்வம் வித்தி
ந இதம் யத் இதம் உபாஸதே ||

சொல்லால் அதை விளக்க முடியாது. எதனின்று சொல் உண்டாகிறதோ அதுவே பிரம்மம். பிரம்மம் என்று பெயர் வைத்து சாதாரணமாகத் தொழுவதெல்லாம் பிரம்மம் அல்ல.

यन्मनसा न मनुते येनाहुर्मनो मतम् ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते ॥

யன் மனஸா ந மனுதே
யேந ஆஹு: மநோ மதம் ।
தத் ஏவ ப்ரம்ம த்வம் வித்தி
ந இதம் யத் இதம் உபாஸதே ॥

மனதைக் கொண்டு நினைப்பது பிரம்மம் அல்ல. எந்த சக்தியால் மனம் நினைக்கிறதோ அதுவே பிரம்மம்.

यच्चक्षुषा न पश्यति येन चक्षूंषि पश्यति ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते ॥

யத் சக்ஷுஷா ந பச்யதி
யேந சக்ஷும்ஷி பச்யதி ।
தத் ஏவ ப்ரம்ம த்வம் வித்தி
ந இதம் யத் இதம் உபாஸதே ॥

கண்ணால் பார்ப்பது பிரம்மம் அல்ல. பிரம்மத்தினால் கண் பார்க்கிறது.

यच्छ्रोत्रेण न शृणोति येन श्रोत्रमिदं श्रुतम् ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते ॥

யத் ஶ்ரோத்ரேண ந ச்ருணோதி
யேந ச்ரோத்ரம் இதம் ச்ருதம் ।
தத் ஏவ ப்ரம்ம த்வம் வித்தி
ந இதம் யத் இதம் உபாஸதே ॥

காதுகளால் கேட்பது பிரம்மமல்ல. எதனால் காது கேட்கிறதோ அதுவே பிரம்மம்.

यत्प्राणेन न प्राणिति येन प्राणः प्रणीयते ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते ॥

யத் ப்ராணேந ந ப்ராணிதி
யேந ப்ராண: ப்ரணீயதே|
தத் ஏவ ப்ரம்ம த்வம் வித்தி
ந இதம் யத் இதம் உபாஸதே

உயிர்ப்பது பிரம்மம் அல்ல. எதனுல் சுவாசம் சுவாசிக்கிறதோ அதுவே பிரம்மம். ஜனங்கள் சாதாரணமாகத் தொழுவதெல்லாம் பிரம்மம் ஆகாது.

மேற்கண்ட மந்திரங்களின் பொருள் என்னவென்ருல் பரம்பொருளின் லட்சணங்களை நேராக விளக்க முடியாது. நம்முடைய உணர்ச்சியும், அறிவும், புத்தி விவகாரமும், எல்லாம் அப்பொருளின் வேலையே யானபடியால், அவைகளைக்கொண்டு பரம்பொருளை அறியமுடியாது. பிரம்மத்திற்குப் பார்க்கக் கண் அவசியமில்லை. கேட்கக் காதுகள் வேண்டியதில்லை. காதும், கண்ணும், சுவாசமும் வேலைசெய்வதே பிரம்மத்தினுல். அப்படியிருக்க, அப்பொருளுக்கு இக்கருவிகள் என்னத்திற்கு?

பிரம்மத்தைக் கண்ணுல் பார்க்கவும் காதால் கேட்கவும் மூச்சால் உறிஞ்சவும் முடியாது; அந்தராத்மாவின் சக்தி இச் செயல்களுக்கு ஆதாரம் என்பதும் இந்த மந்திரங்களுக்குள் அடங்கி யிருக்கிறது. வண்டி ஓடுவது சக்கரம் உருளுவதால். வண்டி

சக்கரத்தை உருட்டப் பார்ப்பதுபோலாகும் நம் அறிவினால் பிரம்மத்தைக் காணப்பார்ப்பது. எவன் பரம்பொருளைத் தான் அறியவில்லை என்று உணருகிறானோ, அவனே அதை உண்மையில் அறிந்தவனாவான். அறிந்துவிட்டேன் என்று ஒருவன் எண்ணினால் அவன் அதை அறியவில்லை என்பதற்கு அந்த உணர்ச்சியே சான்றாகும். தெரிந்து கொண்டேன் என்பவனுக்குத் தெரியவில்லை; தெரியவில்லை என்பவனுக்குத்தான் தெரிந்தது. இதற்கு மந்திரம்:—

यस्यामतं तस्य मतं मतं यस्य न वेद सः ।
अविज्ञातं विजानतां विज्ञातमविजानताम् ॥

யஸ்ய அமதம் தஸ்ய மதம்
மதம் யஸ்ய ந வேத ஸ: |
அவிஜ்ஞாதம் விஜாநதாம்;
விஜ்ஞாதம் அவிஜாநதாம்||

மேற்கண்ட மந்திரங்கள் கேனோபநிஷதத்தினின்று எடுக்கப்பட்டவை. இவ்விஷயம் சங்கிரகமாக அடியிற்கண்ட முண்டகோபநிஷத மந்திரங்களிலும் சொல்லப்படுகிறது:

यत्तदद्रेश्यमग्राह्यमगोत्रमवर्णमचक्षुःश्रोत्रं तदपाणिपादं
नित्यं विभुं सर्वगतं सुसूक्ष्मं तदव्ययं यद्भूतयोनिं
परिपश्यन्ति धीराः ॥

யத் தத் அத்ரேச்யம் அக்ராஹ்யம் அகோத்
ரம் அவர்ணம் அசக்ஷுஃச்ரோத்ரம் தத்
அபாணி பாதம் நித்யம் விபும் ஸர்வகதம்
ஸுஸூக்ஷ்மம் தத் அவ்யயம் யத் பூதயோநிம்
பரிபச்யந்தி தீரா: ||

பரம்பொருளைப் பார்க்க முடியாது; பிடிக்க முடியாது. அதற்குக் குலம் இல்லை, ஜாதி இல்லை. அதற்குக் கண், காது, கை, கால் முதலிய அங்கங்கள் இல்லை. அது நித்தியமாய் எங்கும் பரவி நிற்கும் மிக நுட்பமான பொருள்; அழிவற்றது. அனைத்துக்கும் அது பிறப்பிடம். இவ்வாறு அதை ஞானிகள் அறிவார்கள்.

यथोर्णनाभिः सृजते गृह्णते च यथा पृथिव्यामोषधयः संभवन्ति ।
यथा सतः पुरुषात्केशलोमानि तथाक्षरात्संभवतीह विश्वम् ॥

யதா ஊர்ணநாபி: ஸ்ருஜதே க்ருஹ்ணதே ச
யதா ப்ருதிவ்யாம் ஓஷதய: ஸம்பவந்தி |
யதா ஸத: புருஷாத் கேசலோமாநி
ததா அக்ஷராத் ஸம்பவதி இஹ விச்வம் ||

சிலந்திப் பூச்சி தன்னிலிருந்து நூலை உண்டாக்கி அதைப்பற்றி நிற்கிறது. அதைப்போலவும், பூமியிலிருந்து செடிகள் உண்டாவது போலவும், தலையிலும் உடலிலும் மயிர் முளைப்பதுபோலவும் உலகம் யாவும் பரம்பொருளிலிருந்து உண்டானவை.

ब्रह्मैवेदममृतं पुरस्ताद्ब्रह्म पश्चाद्ब्रह्म दक्षिणतश्चोत्तरेण ।
अधश्चोर्ध्वं च प्रसृतं ब्रह्मैवेदं विश्वमिदं वरिष्ठम् ॥

ப்ரம்ம ஏவ இதம் அம்ருதம் புரஸ்தாத் ப்ரம்ம
பஸ்சாத் ப்ரம்ம தக்ஷிணதஸ்ச உத்தரேண ।
அதஸ்ச ஊர்த்வம் ச ப்ரஸ்ருதம்
ப்ரம்ம ஏவ இதம் விச்வம் இதம் வரிஷ்டம் ॥

முன்னுலிருப்பதும் பிரம்மம். பின்னுலிருப்பதும் அதுவே. வலமும் இடமும், கீழும், மேலும் இந்த அகில விசுவம் முழுதும் எங்கும் பரவி நிற்பது இறுதியற்ற கடவுளே.

23

முடிவுரை

"பன்னரு முபநிட நூலெங்கள் நூலே
பார்மிசை ஏதொரு நூலிது போலே"

— பாரதியார்.

உபநிஷத்துக்களில் என்ன இருக்கிறது, அது எத்தகைய நூல் என்பதை அறியாத சிறுவர்களுக்கு ஒருவாறு தெரியும்படியாக இந்தக் கட்டுரைகளை எழுதிவந்தேன். முதலில் கதைகளாகவும், பிறகு முழுத் தமிழில் பொருளை விளக்கியும், கடைசியாக சில மந்திரங்களை மூலத்தில் உள்ளபடி வட மொழியிலேயே சொல்லி, உரையுடன் கலந்தும் எழுதினேன்.

எல்லா மதங்களினுள்ளும் உத்தமமான மதம் நமது ஹிந்து மதம். அது ஓர் உலர்ந்துபோன கட்டையென்று சிலர் எண்ணுவது தவறு. அது நிழலும் கனியும் தரும் உயிருள்ள மரம். சத்தியமே அதன் உயிர். சத்தியம் என்றைக்கும் உலர்ந்து போகாது. பசித்த பிராணி உணவு தேடுவதுபோல், நம்முடைய முனிவர்கள் உண்மையைத் தேடி யலைந்தார்கள் என்பதை உபநிஷதங்களைச் சரிவரப் படித்தால் உணரலாம். உணர்ந்து அவர்களையும் கவுரவித்து நாமும் தன்னம்பிக்கை அடைந்து பெரும் பயன் பெறலாம்.

'இந்தக் கொள்கையைப் பகவானிட மிருந்து நான் கொண்டு வந்தேன், ஒப்புக்கொள்ளுங்கள்': 'என்னை நம்பினல் உங்களை சுவர்க்கத்திற்கு அழைத்துப் போவேன்': 'நான் அமானுஷீக அற்புத சக்திகளைக் காட்டுவேன்': 'நான் தேவன், என்னைப் பின்பற்றுங்கள்': என்றிவ்வாறெல்லாம் சொல்லி ஒருவர் உபதேசித்ததல்ல ஹிந்து தருமம். பௌதிக-ரஸாயன-சாஸ்திரப் புலவர்கள் எவ்வாறு சோதனைச் சாலைகளில் சத்தியப் பிரமாணங்களைக் கொண்டு பிரகிருதி உண்மைகளைத் தேடிச் சோதித்துத் தாம் கண்டதைச் சொல்லுகிறார்களோ, அவ்வாறே ஆத்ம விஷயத்தைப்பற்றி நம் முன்னோர்களான முனிவர்கள் ஆராய்ச்சி செய்து கண்டறிந்த அறிவே ஹிந்து மதம். ஹிந்துமத சாஸ்திரங்களில் அறிவும் விவேகமுமே பிரமாணம். அறிவை உபயோகித்து அனுமானித்து ஏற்படுத்திய கொள்கைகளே ஹிந்து தருமம். அறிவும் விவேகமும் தெளிவுபட முனிவர்கள் நன்னடத்தை, ஆத்ம சுத்தம், சாந்த நடுநிலை, இவைகளை நியமித்துக் கொண்டார்கள். அதற்காகவே தேகத்தையும் மனதையும் வசப்படுத்தி அடக்கியாள வழி தேடி, பிறருக்கும் காட்டினார்கள். உண்மை ஒன்றையே லட்சியமாகக் கொண்டு ஆராய்ச்சி செய்து நாம் கண்ட தத்துவங்களை, பின்னல் வந்தவர்களுக்குப் பயன்படுவதற்காக முனிவர்கள் சாஸ்திரமாக எழுதிவைத்தார்கள். சாஸ்திரம் என்பது குருட்டு நம்பிக்கையல்ல. சாஸ்

திரம் என்பது எழுதி முடிந்துபோன பொருளும் அல்ல. சத்தியம் என்பதை முடிவாக யாரும் காணவில்லை. காணக்காண சத்தியம் வளர்ந்துகொண்டே போகும். சாஸ்திரமும் அவ்வாறே. சத்தியமே பரம்பொருளை அடையும் வழி. பாதைமேல் கல் பரப்பி நடக்கச் சவுகரியமாகச் செய்வதுபோல் தெய்வத்தை அடையும் வழியின் பரப்பு சத்தியமாகும்.

ஸத்யமேவ ஜயதே நா(அ)ந்ருதம்
ஸத்யேந பந்த்தா விததோ தேவயான:

உபநிஷத்துகளையும் பகவத் கீதையையும் மக்கள் படித்து ஆத்ம சுத்தியடைந்து அறிவும் விவேகமும் பெற்று வாழ்ந்தார்களானல் நம்முடைய நாடு செழித்துச் சிறப்படையும்; சந்தேகமில்லை. ஆண்டவன் அருள்வானுக.

சு ப ம் !

மாடல் அச்சுக்கூடம், சென்னை.—(1937417—13—1.)

ராஜாஜி

குட்டிக் கதைகள்

இந்நூலில் அடங்கியவை :—

(1) தேவானை
(2) அன்னையும் பிதாவும்
(3) திக்கற்ற பார்வதி
(4) ஜகதீச சாஸ்திரிகள் கனவு
(5) அறியாக் குழந்தை
(6) முகுந்தன்
(7) தீபாவளியில் தேவ தரிசனம்
(8) எலெக்ஷன் கதை
(9) சோதிடம் பொய்யாகுமா?
(10) வேணுகானம்
(11) பட்டாசுக் கட்டு

திருப்புகழ் விருத்தியுரை

இவ் அரிய நூலில், திருவேரகம் எனும் சுவாமிமலை; திருவாவினன்குடி எனும் பழநி; திருச்சீரலைவாய் எனும் திருச்செந்தூர் ஆகிய 3-திவ்விய ஸ்தலங்களின் மீது ஸ்ரீமத் அருணகிரிநாதர் பாடிய திருப்புகழ்ப் பாட்டுகளும், அத்திருப்பாடல்களுக்கு பதவுரை, பொழிப்புரை முதலியன மிக்க அழகாய் எழுதப்பட்டு, உயர்ந்த கனமான காகிதத்தில் அழகாய் அச்சிட்டு, கண்கவரும்படி உயர்தர பைண்ட் செய்யப்பட்டது. 10-அழகிய படங்களும் உண்டு. ரூ. 8

ஷ்டி கிளேஸ் காகிதப் பதிப்பு, படங்களுடன் ரூ. 6

பத்திரிகை அபிப்பிராயங்கள்

சுதேசமித்திரன்.— * முதனூலின் அழகிற் கியைந்ததாயிருக்கிறது. முருகன் அழகன், திருப்புகழ் அழகியது. இந்தப் புத்தகமும் அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. * சில பாடல்களின் உரை, மிக்க விசேஷமான தென்று அறிவிக்கப்பட்டோம். ஆனால் ஒவ்வொரு பாட்டின் உரையும் அப்படியேதான் இருக்கிறது.

லோகோபகாரி.— * இது கண்ணுக்கும் கருத்துக்கும் இன்பம் விளைக்கிறது. பண்டிதரும் பாமரரும் போற்றும் திருப்புகழுக்கு உரையில்லாத குறை நெடுநாளாக இருந்து வந்தது. அந்தக் குறை முருகன் அருளால் இப்பொழுது நீங்கிவிட்டது. * இதனைப் படிப்போர் திருப்புகழின் உட்கருத்தைத் தெளிவாக அறிந்துகொள்ளலாம்.

ஸ்வராஜ்யா.— * பொருள் விளங்காது திருப்புகழைப் பாடவும் படிக்கவும் பேரவாக் கொண்டிருப்போர், இவ்விருத்தியுரை கண்டு இதயம் கனிவரெனக் கருதுகிறோம்.

குமரன்.— * பொதுவாகத் தமிழ் மக்களும், சிறப்பாக முருகக் கடவுளது அடியார்களும் திருப்புகழுக்கு விருத்தியுரை காணும் நன்முயற்சியினை ஆதரிப்பார்களென்று நம்புகிறோம்.

இந்து சாதனம்.— * மிக நுட்பமாகவும் விரிவாகவும் பல தக்க பிரமாண சகிதமாகவும் இனிது எழுதப்பட்டுள்ளது. கண்டோர் கண்கவரும் வனப்பினதாய் அழகுற அச்சிடப்பட்டிருக்கிறது.

ஸமரஸ போதினி.— * திருப்புகழுக்கு இதுவரை, நமக்குத் தெரிந்தமட்டில், இத்தகை உரை இலது. இவ்வுரை மிகவும் அழகிய நடையில், பொருள் நுட்பங்களை மழுப்பிவிடாது நன்கு விளக்கி எழுதப்பட்டிருக்கின்றது.



கண்ணன் காட்டிய வழி

அதாவது

பகவத் கீதையின் பொருள் விளக்கம்

சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

இயற்றியது :: அண 8

முக்கியமான சுலோகங்களும் உரையும் அடங்கியுள்ளது.

பொருளடக்கம்

முன்னுரை; (1) பாரத கதையும் கீதையும்; (2) கீதையின் சிறப்பு; (3) சிற்றறிவின் மயக்கம்; (4) பரம்பொருளாராய்ச்சி; (5) ஆராயும் முறை; (6) ஏன் கவனிக்கவேண்டும்? (7) சாஸ்திரம் படிக்கும் முறை; (8) ஆத்மா; (9) கர்மவிதி; (10) கர்மபலன்; (11) கர்மவிதிக்கு ஆட்சேபங்கள்; (12) பிரகிருதி, ஜீவன், பரமாத்மா; (13) கர்மயோகம்; (14) கர்மயோகமே வேள்வியும்; (15) கர்மயோகமே துறவும்; (16) அமைதியற்ற துறவு; (17) கர்மயோகமும் வாழ்க்கை நலமும்; (18) மனதைக் காத்தல்; (19) தியானம்; (20) இயற்கைக் குணங்கள்; (21) அனைவருக்கும் விடுதலை; (22) நாஸ்திகம் கூடாது; (23) குண விபாகம்; (24) பிரபத்தி; (25) அனைத்தும் ஒன்று; (26) அத்துவைதமும் கர்மயோகமும்; (27) விசுவரூப தரிசனம்; (28) முடிவுரை.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.